Approved for class use by the Text-book Committee, Madras.
Vide Consolidated List Page 120 F. S. G. G. Part I B. Suppt. Dated 30—4—40.

ஸ்ரீ

வீர பத்தினிமார்

(HEROINES OF IND)

(முதல் பாகம்)

E. M. GOPALAKRISHNA KONE

MADURA :: :: MADRAS

 1940 [As. 8

6003

ஸ்ரீ

வீரபத்தினிமார்

(HEROINES OF IND)

(முதற்பாகம்)

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

மதுரை & சென்னை.

1940.

 [விலை அணா 8.

Reprinted———1940.

Approved for Class Use by the Text-Book Committee
Madras.

Vide Consolidated List F. S. G. G. Suppt. Part 1—B,
Page 120, Dated 30-4-40.

முன்னுரை

உலக வாழ்வோ பேரலை பொருந்திய சாகரம் போலாகும். மலைபோல் உயரக் கிளம்பும் அலைகள் கொண்ட கடலைக் கடக்க நீராவிக் கப்பல் தேவை யாவதுபோல், சம்சார சாகரத்தைக் கடக்க வீரமும் வலியும் அவசியம். வாழ்வில் மட்டுமின்றி வீழ்விலும் வீரம் விளங்குதல் வேண்டும். அத்தகைய வீரமும் வலியும் ஆடவருக்கே உரியன என்பர் சிலர். பெண்டிருக்கு அவ்விரு அருங்குணமும் இன்றேல் ஆடவருக்கு எங்ஙனம் வீரமும் வலியும் உதிக்கும்? மேலும் பெண்டிரே தம் மக்களுக்குக் குழந்தைப்பருவம் முதல் வீரப்பால் ஊட்டி வளர்த்துவரக் கடமைப்பட்டுள்ளோர் ஆவர். ஆதலின் பெண்டிரே வீரத்தின்வித்தாகவும் விளைநிலமாகவும் விளங்கும் உரிமை உடையோர். இங்ஙனமிருக்க, மாதரைப் பேதையர் எனவும் அபலைகள் எனவும் சிலர் இலேசாகப் பேசுதல் உண்டு. அத்தகையோருக்கு அறிவு கொளுத்தவும், இளஞ் சிறுவர் சிறுமியருக்கு வீரம் புகட்டவும், "வீரபத்தினிமார்" எனும் இந்நூல் வெளி வருகின்றது. விளையும் பயிருக்கு முளையிலேயே ஊட்டம் கொடுத்தல் வேண்டும் அல்லவா? அங்ஙனம் நம் பாலர் பாலிகைகளுக்கு வீரமும் வலியும் புகட்ட இந்நூல் உதவின், அஃதே நாம் எதிர்பார்க்கும் கைம் மாறாகும்.

பிரசுரக்கர்த்தர்.

நூலடக்கம்

ஸ்ரீ

வீர பத்தினிமார்

1. ஸ்ரீ மங்களதேவி

தேனினும் இனியது நமது தமிழ் மொழி. அம்மொழியிலே பெண் என்பது பெரும் பேதைமைத்து எனும் முது மொழி ஒன்று உளது. அஃது பெரும் போக்கான வசனமாம். அவ்வசனத்தைப் பொய்ப்பிக்கவே, இராஜபுத்திர மாதர் பிறந்தனர் போலும். விறல் மந்திரி மதியும் வீரதீரமும் கொண்ட பெண்டிர் பலரைப் பெற்றெடுத்த பாக்கியம் இராஜபுதனத்துக்கே உரியது.

பதினன்காம் நூற்ருண்டின் மத்தியிலே அத்தேசத்திலுள்ள கோட்டை என்னும் குறுநாட்டை ஆண்டு வந்தவன் பூவணங்க தேவன். அவன் அறிவாற்றல்களில் நிரம்பிரியவன்; ஆயினும், விதிவசத்தால் காதலுக்கும் அபினுக்கும் அவ்வரசன் அடி

மையாகிவிட்டான். மனைவி மங்களதேவி பன்முறை நயந்தும் பயந்தும் புத்தி புகட்டியும், பூவனங்கன் அதனைப் பொருட்படுத்த வில்லை.

கேடுவரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே என்பது மூதுரை அல்லவா? அரசனது அவல புத்தி கண்டு படைவீரரும் வெறுப்புக் கொண்டிருந்தனர். தாகூர்கான், கேஸரி கான் என்னும் இரு முகம்மதியர் அதுவே தருணமெனக் கருதி, அக் கோட்டை நாட்டைக் கைவசஞ் செய்து கொண்டனர். உடனே மங்களதேவி தன் மகனை அழைத்துக்கொண்டு, பிறந்தவகம் புகுந்து, தன் கதியை நினைந்து வருந்தி யிருந்தனள்.

நாடிழந்த பின்னரும் பூவனங்கன் தனது தீக்குணத்தை விட்டானில்லை. அதனால் அரசியின் துயரம் இன்னும் ஓங்கி வளர்ந்தது. அவளோ தனது குல தெய்வத்தைக்குறித்துநோன்புகொண்டுகிடந்தனள்.

நாளடைவில் ஈசன் கண் திறந்தான்; திறக்கவே, அம் மன்னவன் மதிகொண்டு, தனது பிழைக்கு வருந்தி, "ஆருயிர்த் தலைவியே, போனது பற்றி வருந்திப் பயனில்லை. என் நெறிப் பிசகனைத்தையும்

பொறுத்து, நாட்டை மீட்பதில் நாட்டங் கொள்ள வேண்டும்,'' என்று இரந்து கூறினன். அவ்விரு முகம்மதியரோ வலிமிகப் படைத்திருந்தனர். ஆதலின் அன்னவரைப் படை கொண்டு புறங் காணுதல் முடியாதென அக்காரிகை கண்டு, தந்திரமொன்று கையாளலாயினள்.

இராஜபுதனத்திலே வசந்த காலத்தில் காமன் பண்டிகை கொண்டாடுதல் வெகு பிரபலம். அப்போது ஆடவரும் பெண்டிரும் அளவு கடந்து ஆனந்தங் கொண்டு அரிய சிறிய விளையாட்டில் முனைந்துகாலங் கழிப்பர். ஆண் மக்களோ செம்பஞ்சுக் குழம்பு சேகரித்து. அதனைக் குழல்கொண்டு பலர் மீதும் தூவிப் பரிகாசங் காண்பர். பெண்பாலரும் அங்ஙனமே சந்தனம். குங்குமக் குழம்பு இவை தெளித்து ஆடவருடன் விளையாட்டில் கலந்து கொள்வர். அதற்கு அன்னவர் தமது உறவின் முறையாரையும் அயலாரையும் தருவிப்பது உண்டு.

மங்களதேவி அப்பண்டிகை சமயத்தில் தனக்கு உற்ற மங்கையரையும் ஆடவரையும் சங்கீதக் கச்சேரிக்கு வரவழைத்தனள். தாகூர்கான், கேசரிகான் ஆகிய இருவருக்

கும் அழைப்புக் கடிதம் போயிற்று. இராஜபுதன மங்கையரிட மிருந்து அழைப்பு வந்ததை ஒரு பெரும் பாக்கியமென இருவரும் கருதிப் பரம களிப்புடன் அக்களியாட்டத்துக்குச் சென்றனர்.

அவ் விருவரையும் மங்களதேவி மகிழ்ச்சியுடன் வரவேற்று, உள்ளே அழைத்துச் சென்று, அழகிய ஆசனத்தில் அமர்த்தினள். பின்னர், கானத்தில் கை வந்த காரிகையொருத்தி புருவம் நெரியாமல் உதடு அசையாமல், குயிலும் நாணக் குரல் எடுத்துப் பாடினுள். முகம்மதியர் இருவருக்கும் அப்பாடல் கேட்டுப் பூரிப்பு உண்டாயிற்று. முடிவில் ஒன்பது பெண்கள் கை கோத்து வட்டமாகச் சுற்றி வந்து, சோளமடித்து வேடிக்கை பல புரிந்தனர்; சில மங்கையர் சந்தனமும் குழம்பும் எடுத்து அனைவரின் மீதும் வாரி இறைத்தனர்.

மங்கள தேவி தனது இருகரத்திலும் செம்பஞ்சுக் குழம்பு கொண்ட கிண்ணங்கள் தாங்கி, பரத சாஸ்திர விதிக்கிணங்க அபிநயித்து ஆடிப் பாடினள். அப்பால், கை தவறியது போல் கிண்ணம் இரண்டையும் அவ்விருவரின் தலையில் அப்பாவைநல்லாள்

போட்டு உடைத்தாள். அவ்வளவு தான் தாமதம்! மங்கையரைப்போல் வேடம் பூண்டு வேடிக்கை புரிந்து நின்ற இராஜபுத்திர வீரர் தமது உடைவாளையும் ஈட்டியையும் உருவவே, அவ்விருவரின் சிரங்களும் தரையில் உருளலாயின. அம் முகம்மதியருடன் வந்திருந்த துணைவருக்கும் அக்கதியே கிட்டியது.

உடனே இராஜபுத்திர வீரர் தம் தலைவியுடன் சென்று, அக்கோட்டை நாட்டைமீட்டுப் பூவனங்கனுக்குப் பட்டாபிஷேகம்செய்தனர். அப்பால் மடிந்தவிருவரும் வேற்று மதத்தினரும் பகைஞரும் ஆயினும், அன்னாரின் சவத்தை இஸ்லாமிய மதக் கொள்கைக்கு இணங்க அந்நாட்டிலே ஓரிடத்தில் அடக்கஞ் செய்து ஆங்கே கோரி ஒன்றும் எழுப்பினர். இன்றும் அக்கோரி அந்நாட்டில் நிலைத்து நிற்கின்றது.

2. வீர பாநுமதி

சீர்மிகப் படைத்தது நமது பாரதபூமி. அதன் மத்தியில் இராஜபுதனம் எனும் தேச மொன்று உளது. அந்த இராஜபுதனக் குறு நாடுகளில் ஒன்று பூண்டி எனப் படும். சில நூற்றாண்டுகளுக்கு முன்னம் அங்கே பாநுமதி என்னும் பெண் ணொருத்தி வசித்து வந்தனள். அவளது கணவன் பரம ஏழை.

போர் இல்லாத காலத்தில் இராஜ புத்திரர் கழனிக் காடுகளை உழுது பயிரிடுதல் வழக்கம். சமர் மூளின், அக்கணமே உழு கலப்பையை விடுத்து, உடைவாள் ஏந்தி உறுமிக் கிளம்ப அன்னார் தவறார். நாதன் உழுது பயிரிடுகையில், மனைவியும் கூட இருந்து உதவி புரிவாள். வேளை பார்த்து நாயகனுக்கு அன்னம் கொண்டு வந்து கொடுத்து ஆதரிப்பாள்.

ஒரு தினம் பாநுமதி தன் தலையில் பர்த் தாவுக்குக் காலையுணவு சுமந்து சென்றனள்.

அவள் சென்றவிடமோ ஒரு காட்டுப்பாதை. அங்கே கரடிகள் மிக அதிகம். அவை மிகவும் பயங்கரமான வடிவும் வலியும் கொண்டவை. வழியிலே அப் பெண்பாலைக் கரடியொன்று எதிர்க்கலாயிற்று. தலையிலே சாதக் கூடையிருக்க, இடுப்பிலே பச்சைக் குழந்தையொன்று மாராப்பில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது.

தலைச் சுமையையும் இடையிலுள்ள குழவியையும் இறக்கி வைத்து, அக்கரடியை எதிர்க்க அக்காரிகைக்கு அவகாசம் இல்லை. அவகாசம் இருப்பினும், இரண்டையும் இவ்வனவிலங்கு பாழ்படுத்தி விடும். இந்நிலையில் அவள் எங்ஙனம் கரடியை எதிர்ப்பது? கரடியைக் கண்டு சிறிதும் அவள் அஞ்சவில்லையாயினும் குழந்தையைக் காத்து, அன்னத்தை அகமுடையானுக்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதே அவளது கவலை ஆயிற்று.

ஆபத்தில் அறிவுகலங்காத அம்மங்கை நல்லாள் ஒரு பெரியமரத்தடியின் பின்பக்கத்தில் ஒதுங்கினள். கரடியும் அம்மரத்தைச் சுற்றி வந்து அவளைப் பிடிக்கத் தொடங்கி, இரண்டு பின்னங் கால்களையும் ஊன்றிக்

கொண்டு, முன்னங்கால் இரண்டையும் கை போல் கையாள லாயிற்று. சமயம் பார்த்து அந்நங்கை கரடியின் இரு முன்னங் கால்களையும் தனது இரு கரங்களினால் பற்றிக் கொண்டனள். அம்மரத்தின் ஒரு புறம் கரடியும் மற்றொரு புறம் மங்கையுமாக இருக்க, அவள் தனது முழுவலியுங்கொண்டு அதனை மரத்தோடுமரமாக நன்கு அழுத்தித் தேய்க்கலானாள்.

சிறிய தலையும் குறுகிய கழுத்துங் கொண்ட கரடி அவளது கையைக் கடிக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. இதற்குள் கணவன் காலை போஜனத்திற்குக் காத்திருப்பனே என்று அச்சுந்தரிக்குச் சிந்தனை பிறந்தது. அச்சமயம் அவ்வழியே முகமதிய னொருவன் சென்றனன். பானு மதி அவனைக் கூவி, "ஐயா! யான் என் தலைவனுக்கு அன்னம்படைத்துவருமளவும் இக்கரடியைப் பற்றி நிற்பீராக. விரைவில் வந்து உம்மை விடுவித்து, இம்மிருகத்தை யும் மாய்ப்பேன்" என்று மொழிந்தனள்.

அம் முகம்மதியனுக்கோ கரடியுடன் எப்படிச் சமாளிப்பது என்ற ஏக்கம்உண்டா யிற்று. என்றாலும் பெண்ணொருத்தியின்

முன்னே தனது வலுக்குறைவைப் புலப் படுத்திக் கொள்ள அவனுக்கு மனம் வர வில்லை. ஆதலின், அவன் கரடியின் முன்னங் கால்கள் இரண்டையும் பற்றிக் கொள்ள, பாநுமதி விரைந்து சென்றனள். தனது வயலை நோக்கி, சிறிது தூரம் அவள் சென்றவுடனே, அந்த ஆண்மகனானவன், 'பெண்ணே! இக்கொடிய மிருகத்துக்கு ஈடு கொடுக்க என்னால் இயலாது. என்னை இச் சங்கடத்தில் சிக்கவைத்துச் செல்லுதல் உனக்கு அழகாமோ,?'' என்று வருந்திக் கூவி யழைத்தனன்.

அவளோ, "ஆடவ! சற்றே பொறுத் திரும்; இதோ வந்து விடுகிறேன். ஒரு கரடியுடன் சிறிதுநேரம் சமாளிக்காதவனும் ஆண்பிள்ளை ஆவனோ,?'' என்று சொல்லிக் கொண்டே போயினள். அவனுக்கோ கரடியை விட்டு ஓடவும் துணிவு இல்லை; அதனை மாய்க்கவும் உடல்வலி இல்லை. ஆதலின் அம்முகம்மதியன் வலையில் சிக்கிய மானேபோல் வாடி வதங்கி னன். சிறிது நேரஞ் சென்றதும், அவள் தன் கணவனுக்கு அன்னமிட்டுத் திரும்பி வந்து, துப்பாக்கி கொண்டு அம்மிருகத்தை

மாய்த்து, முகம்மதியனது அச்சத்தை ஒழித்தனள். உயிர் தப்பியது ஆண்டவன் புண்ணிய மென அவன் எண்ணி அல்லாவைத் தொழுது கொண்டு போனான்.

3. வேதவதி

பூமகளின் திலகம் போன்றபரதகண்டத்தில் முன்னம்பேரரசு கொண்டிருந்தோர் பலர். அவர்களில் மிகச் சிறந்தவன் அக்பர். அன்னியரை இத்தேசத்தில் அண்டவிடக் கூடா தென்று அருஞ் சமர் புரிந்த இராஜபுத்திரரை அம்மன்னர் மன்னன் நால்வகை உபாயங்களையும் கையாண்டு அடக்கவும் அணைக்கவும் முயலா நின்றான்.

மன்னரில் பலரும் அவ்வேந்தர் வேந்தனைவணங்கி, மகளையும்மகிஷிகளாகத் தந்து, மகிழலாயினர். ஆயினும் மத்தியபதி நாட்டின்மன்னவரோ கலப்புவிவாகத்துக்கு இணங்கவும், வேற்றரசருக்குத் தலைவணங்கவும் ஒருப்படவில்லை. அந்நாளிலே இராஜ மகளிரில் மத்தியபதிமங்கையரே அழகிலும் குணத்திலும் வனப்பிலும் வாழ்க்கையிலும் இணையற் றிருந்தனர்.

அக்பரோ நானாதேசங்களின் நாரீமணிகளை மணந்திருந்தான். அவனது அந்தப்

புரத்தில் ஐயாயிரம் அரிவையர் இருந்தன ரென அறியக் கிடக்கின்றது. ஆனால் மத்தியபதி மங்கை மட்டும் அச் சக்கர வர்த்தியின் மாளிகையைச் சிறப்பிக்கவில்லை. உயிரினும மானமே பெரிதென மதிக்கும் மங்கை நல்லார் மதங்கெட்டு மாற்றானை மணக்க மன மொப்புவரோ?

இத்தேசத்தில் தனியரசு கொள்ளக் கருதிய அக்பர் சக்கரவர்த்தி அம்மத்திய பதியைமடக்கக்கருதி, அதன் பார்த்திபனும் பிரதாப சிம்மனுடன் இருபத்தேழு வருஷ காலம் கொடுஞ் சமர் முறுக்கினன் என்று லும் அப்பிரதாபனைப் புறங்காண அக் பரால் ஆகவில்லை. அச்சமயத்தில், மத்திய பதி மங்கை யொருத்தியை எங்ஙனமேனும் மணந்துவிடவேண்டுமென அவன் பெருஞ் சூழ்ச்சி யொன்று புரிந்தான். அதன் விளைவை இங்கே எடுத்துரைப்போம்.

இந்துக்களிலே நவராத்திரி என்னும் பண்டிகை கொண்டாடப் படுவது போல், அக்பரின் ஆட்சிக் காலத்திலே அவனது மாளிகையில் நவதினம் எனும் விழா ஒன்று ஆண்டுதோறும் நடப்பதுண்டு. அந்த ஒன்பது தினங்களிலும் அக்பர் சக்கரவர்த்தி

அதிக ஆடம்பரத்துடன் பகலிலே கொலு விருப்பான். சிற்றரசர், குறு நில மன்னர், பட்டவர்த்தனர். மகுட வர்த்தனர், படைத் தலைவர், பெருமக்கள் முதலிய அனைவரும் அத்தாணி மண்டபங் குறுகி, உரிய காணிக்கை செலுத்தித் தமக்குரிய ஆசனத்தில் அமர்ந்து சபையை அலங்கரிப்பர்.

இரவிலோ அக்பரின் பட்டமகிஷி அந்தப் புரத்திலே கொலுவிருப்பாள். அப்போது சிற்றரசர், சேனைத்தலைவர் முதலியோரின் மனைவியர் அனைவரும் வந்து, சக்கரவர்த்தினிக்கு மரியாதைசெய்து, மணியாசனத்தில் அமர்ந்து மகிமை பெறுவர். மேலும் அந்நங்கையர் தமது ஒய்வு நேரங்களில் நேர்த்தியாகச் செய்த கைத் தொழில் பொருள்களையும் அழகுற வரைந்த சித்திரங்களையும் அச்சபையில் பரப்பிவைத்துப்பட்ட மகிஷியிட மிருந்து பெருமையும் பெருவிலையும் பெறுவர்.

அத்தருணத்திலே அக்பர் பெண் வேடம்புனைந்து, அரயிசின் கொலு மண்டபம் புகுந்து; ஆங்குள்ள காட்சியைக் கண்டு களிப்பான்; எழில் நலம் வாய்ந்த தெரிவையரைக் காணின், அன்னாரை மயக்கித் தன்

மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்ள முயலுவான். எண்ணிப் பத்து அங்கை யிட்டால், இந்திரன் மகளும் மனஞ் சலிப் பாள் என்பதே அக்பரின் நினைப்பு.

அக்பரின் பெரு வீரரிலே ஒருவன் பிருதிவிராய் எனப்படுவான். பிருதிவியின் மனைவியோ பேரழகு படைத்தவள்; எவ் வகையிலேனும் அந்த நங்கைக்கு நிகரான மங்கையர் அந்நாள் இருந்ததில்லை. அவள் மத்தியபதி ராஜ வமிசத்தைச் சேர்ந்தவள்; பிரதாப சிம்மனது தமையனும் பெரு வீர சிங்கமுமான சக்த சிம்மனது புதல்வி. அவளைப் பேதித்து விட வேண்டுமென அக்பர் ஆவல் கொண்டு கிடந்தது கூறும் தரம் அன்று. ஓர் உபாயமும் கை கூடாமல் போகவே, நவதினப் பண்டிகை சமயத்தில் கடைசி முறையாக அக்காவலன் அவளை யடைய முயல்வானாயினன்.

அரசி கொலுவிருக்கும் மண்டபத்தி னுள்ளே அக்பர் பாதுஷா ஒரு மாதைப் போல் வேடம் பூண்டு, தனது நண்பனொரு வனையும் பெண் கோலத்துடன் கூட அழைத்துச் சென்றான். அம் மண்டபத் திலே நிரம்பியிருந்த நாரியரின் நல்வனப்பை

நயனங் கொண்டு அந்நரபதி பருகிய பின்பு, பிருதிவியின் பத்தினியைக் குறுகி அவளுடன் உரையாடி நின்றனன். வஞ்சனை யறியாத வேதவதியாம் வீரதேவியும் வேடிக்கையாக அம்மாயப் பெண்ணுடன் அளவளாவினள். முடிவிலே நள்ளிரவில் அவள் தனது மாளிகை செல்லப் புறப்பட, அக்பரது நட்பாளன் பணிப் பெண்ணைப் போல் அவளைத் தொடர்ந்து சென்று, அரண்மனையின் சுரங்க வழி யொன்றில் கொண்டு சேர்த்து, திடீரென்று மறைந்து போயினன்.

அக்கணமே அக்பர் தனது சுய வடிவுடன் அத்தையலின் முன்னே தோன்றி நின்று பரக்க விழித்தான். வீரதேவியோ எதிர்பாராத வஞ்சனை விளைவை யுணர்ந்து பிரமித்துப் போயினள். அக்பரோ அசடு வழிய வாய்திறந்து பேசக் கருதினன். எனினும் நாவோ உரையொன்றும் கூற முடியாமல் தழதழத்தது. உடனேவீரதேவி அக்பரை நோக்கி, "ஆடவ! இத்தகைய மதிகேடு உன்னைத் தொடரலாகுமோ? நீ அரசன் அன்றோ? அனைவரும் உன்மக்கள் ஆவரே! மக்கள் போலுள்ள பிரஜைகளை நெறிதவருமல் காக்கக் கடமைப் பட்டவன்

காவலனே ஆவான். அத்தகைய தரணி பாலனேநெறிதவறி, அவதி இழைக்க முற்படின், அவனுக்குத்தண்டனைகிடையாதோ? நானு விதமானவழியில் பற்பல மங்கையரை நீ மயக்கி யிருப்பதை யான் அறிவேன். அப்பாவம் உன்னையும் உன் சந்ததியையும் வேரறுக்கும்என்பதை மறந்தனையோ! தீயில் உல்லாசமாக வீற்றிருக்கவிரும்பினுல், ஈயின் கதி என்னுகும்? மத்தியபதி மங்கையையும் பங்கங் காணத் துணிந்து விட்டாய் நீ. நல்லது, இனியேனும் நன்மதி கொண்டு, நெறியுடன் நடப்பாயாக" என்று நீதிபல புகட்டினள். பாலையில் பொழிந்த மழை போல் அச்செஞ்சொல் ஒன்றும் அக்பரிடம் பயன் படவில்லை.

அச் சக்கரவர்த்தியோ வீர தேவியை அச்சுறுத்த முயன்று, தனது உடைவாளை உருவினன். அவளும் தனது ஈட்டிதனை எடுத்து, அக்பரின் மார்புக்கு நேரே நீட்டி, "மதி கெட்ட மன்னவ! இன்று உன் கையால் யானும், என் கையால் நீயும் கொலை யுண்பது திண்ணம். உனது வாள் வலிக்கு எனது ஈட்டிக் குத்து இம்மியும் தோற்காது" என்று வீரம்பேசினள்.

அப்போது தீய சிந்தை அவனைவிட்டு அகலவில்லை. அக்கணத்தில் வீர தேவியின் பின் பக்கத்தே மத்தியபதியின் குல தெய்வமான அம்மை பவானி காளி வடிவங் கொண்டு, சிம்மவாகனத்தில் அமர்ந்து, மகிஷாசுரனைத் தொலைக்கப் புறப்பட்டதே போல், அக்பருக்கு முன்னே காணப் பட்டனள். அவ்வுருவைக் கண்டதும், அக்பர் நடுநடுங்கி ஆவி சோர்ந்து, உயிர்ப் பிச்சை கேட்டான்.

உடனே அவ்வீரமாது; "அரசே! உருவின ஈட்டி இரைகொள்ளாமல் உறைபுகாது. உனது ஆவியைக் கவரலாம் என்றாலோ, நீ பணிந்து விட்டனை பாதம் பிடித்து. மண்டியிடும் மாற்றானை மாய்த்தல் சுத்த வீரம் படைத்த இராஜபுத்திரிகளின் இயற்கை அன்று. எனது ஈட்டிக்குரிய இலக்காக எதனைக் கொடுப்பாய் நீ? உன் சிந்தையில் உள்ள தீய எண்ணத்தை இக்கணந்தொட்டு விட்டு விடுவதாக வாக்குறுதி தரின், அது போதும். வேலியே பயிரை மேய்வது போல், இன்றளவும் நீ அவதி இழைத்து வந்தனை. இனி, உலகில் உள்ள மாதர் அனைவரையும் தாய்போல், அல்லது உடன்

பிறப்பே போல், நீ எண்ணி நடத்தல்வேண்டும். உங்கள் நீதி நூல்களும் எங்கள் நீதி நூல்களும் மதிமோசம் போக வேண்டாம் என்று போதம் கூறுகின்றனவே. தீவினை காரணமாக அதோ கதி ஆன அரசருக்குக் கணக்கில்லை. அறிந்தறிந்து பாவஞ் செய்யின், அழுதழுது அனுபவிக்க வேண்டும். என் காலைப் பிடித்துக் கொண்ட பின்னர். உன்னைக் கடாட்சிக்காமல் இருக்க இயலவில்லை,'' என்று கூறினள்.

அக்பர் அறிவு தலைப்பட்டு, "இனிச் சிந்தையிலும் தீமை கொள்வதில்லை'' என ஆண்டவன் மீது ஆணையிட்டுச் சொல்லினன். உடனே அம்மை பவானி அவ்வீர தேவிக்குக் காட்சி தந்து மறைந்தனள். அது கண்டு, "அம்மையே! உனது அருளால் என் மானம் தக்கியது; மன்னவனும் மதி கொண்டனன்,'' என்று துதித்துத் தனது வீடு சேர்ந்தனள் வேதவதி.

4. தேவி இந்துமதி

புண்ணியம் மிகுந்த பாரத வருஷத்தில் வீரத்தின் விளை நிலம் இராஜபுதனம். அந்த இராஜபுதனத்தின் பல நாடுகளில் ஒன்று மத்தியபதி. தலை நகரின் பெயரைக் கொண்டு, அதனை உதயபுரி என அழைக்கின்றனர். பதின்மூன்றும் நூற்றுண்டிலே உதயபுரியைப் பரிபாலித்து வந்த பார்த்திபன் மகாராணு இலட்சுமண சிம்மன் எனப்படுவான்.

அம்மன்னவனுக்கு மைந்தர் பன்னிருவர் பிறந்தனர். அக்குமாரரில் முதல்வன் பெயர் அரசிம்மன். அவனுக்கு வேட்டையாடுவதில் விருப்பம் அதிகம். ஆதலின் அரசிம்மன் வாரந்தோறும்வேங்கைக்குன்றினுக்கு வேட்டையாடப் போவான். அது காலை அவன் துணைவரும் உடன் செல்வர்.

வேட்டையிலே முள்ளம் பன்றியைக் கண்டு அவர்களுக்குப்பரமானந்தம்பிறக்கும். அம்மிருகம் மகா மூர்க்கம் பொருந்தியது. ஆதலின் அதனை வேட்டை யாடுதல்

கஷ்டமே. எனினும் அவ்விலங்கினை மடக்கி மாய்ப்பதில் இராஜபுத்திரர் மகா சமர்த்துடன் முனைந்து நிற்பர்.

ஒரு தினம் அரசிளங்குமரனும் அவன் துணைவரும் வேட்டைமீது சென்ற சமயம் முள்ளம் பன்றி யொன்று தென்பட்டது. அதுமிகவும் பருத்துக் கொழுத்திருக்கவே, அவ் விளைஞர் அனைவரும் ஆர்வமுடன் அதனைத் துரத்தலாயினர்.

பன்றியோ மாரீசமானைப்போல் அவர்களை ஏமாற்றத் தலைப்பட்டது. அது காரணமாக அன்னவர்மிகவும்களைத்துப் போயினர். எனினும் கருமமேகண்ணுயிருந்த அக்குமரர் அதனைத் தொடர்ந்து செல்லப் பின் வாங்கவில்லை. முடிவிலே அம் முள்ளம்பன்றி ஆங்கிருந்த அழகிய சோளக் கொல்லை யொன்றில் புகுந்து பதுங்கிக் கொண்டது.

அயலாரின் தோட்டத்திலே அநுமதியின்றி உள்ளே புக அரசிம்மன் மனம் துணியவில்லை. அத்தோட்டமோ செழித்துக் கொழுத்திருந்தது. சோளத் தண்டு ஒவ்வொன்றும் ஓர் ஆள் உயரத்திற்கு மேல் ஓங்கி வளர்ந்திருந்தது. பதினாறு வயது கொண்ட மங்கை யொருத்தி அக்கொல்லை

யிலே பரண் மீது இருந்து கொண்டு, கையிலே கவணும் கல்லும் தாங்கி பட்சி சாலங்களை ஓட்டிக்கொண்டிருந்தனள்.

முள்ளம் பன்றி வந்து புகுந்ததையும், வாலிபர்வேசாறிப் போய்வெளியே நிற்பதையும் அம் மங்கை நல்லாள் அறியலானாள். உடனே அவள் சோளத் தண்டொன்றைப் பிடுங்கி, அதனை அம்புபோல் கூர்மைப் படுத்தி, வராகத்தைக்குறிபார்த்து வீசினள். அக்கணமே முள்ளம் பன்றி அடிபொறுக்க மாட்டாமல் அலறி வீழ்ந்தது.

பெண்ணரசி அஃதுணர்ந்து,பன்றியை இழுத்துச் சென்று, வாலிபரின் முன்னே வீசி எறிந்து, "இளைஞர்காள்! நீவிர் வெருட்டி வந்த விலங்கு இஃதன்றோ?" என்றுபுன்னகையுடன் புகன்று போயினள்.

தம் குலக் குமரிகளின் வீரதீரச் செயல்களை அவ்வாலிபர் அறிவராயினும்,அக்காரிகையின் வீரவிளைவும் சொல்லும்அவர்களைப் பிரமிக்கச் செய்தன. பின்னர் அவ்விளைஞர் பன்றியை இழுத்துச் சென்று ஓர் அருவிக் கரை சேர்ந்து, அதனை ஆங்கே ஆக்கிப் புசிக்கலாயினர். புசிக்கையில், அவ்வீரமாதின் மணமாலை பெறுவோனே பாக்கியவான் என அவர்களுக்குள் பேச்சு நிகழ்ந்தது.

அச்சமயம் உண்டை வில்லொன்று கன வேகமாக வந்து தாக்க, அரசிளஞ் சிங்கத்தின் அழகிய அசுவம் பொத்தென்று பூமியில் விழுந்து மாண்டு போயிற்று. உடனே உண்டை வில் வந்த திக்கை அன்னூர் வியப்புடன் உற்று நோக்கினர். நோக்கவே, அப்பெண்பாலின் பரணிலிருந்தே உண்டைவில்வந்திருக்கவேண்டும் என்று அவர்களுக்குப் புலப்பட்டது.

தான் வீசிய உண்டைவில்லினுல் இராஜகுமாரனது பரிமா காலைப் பரப்பிக்கொண்டு வீழ்ந்ததை அப்பெண் அறியலானுள். உடனே அவள்விரைந்துவந்து. "சோதரர்காள்! விளையாட்டு வினையாக முடிந்தது. மன்னித்தல் வேண்டும்" என்று வருந்திக் கூறிப் போயினள்.

அந்தி மாலை வந்து நெருங்கியதும், அவ்வாலிபர் சித்தூர் நோக்கிச் செல்லலாயினர். அவ்வீர மாதும் தனது வீடு நோக்கிப் புறப்பட்டாள். அவள் தலையிலே அடுக்காகத் தயிர்க்குடமும் கையில் இரண்டு எருமையும் இருந்தன.

அதுகண்ட வாலிபர், "இவளோ பெண்ணினம்; நாமோ ஆண் பிள்ளைகள்.

இப்பாவை நம் அனைவரையும் தனது தோள் வலியால் இருமுறை பரிவம் கண்டனள்; நாமும் விளையாட்டாக இவளுக்குப் பாடம் புகட்ட வேண்டும். இன்றேல் நாம் ஆண்மக்கள் ஆகோம்,'' என்று பேசிக் கொண்டனர்.

இளைஞரில் ஒருவன், "தோழர்காள், அத் தையலுக்குப் புத்தி புகட்டுதல் ஒரு பொருட்டன்று. அவள் சிரமீதுள்ள குடங்கள் குப்புற வீழும் வண்ணம் நொடிப் பொழுதில் யான் செய்து விடுவேன். அச் செயல்கண்டு நீவிர் இறும்பூது எய்தி ஆறுதலும் அடையலாம்,'' என்று கூறினன்.

ஏனையோர், "அன்ப! அது ஆகாத காரியம். குளிக்கப் போய், சேற்றைப் பூசிக் கொள்ள வேண்டாம்,'' என்று கூறினர். சூளுரைத்த இளைஞனே தனது குதிரையைத் தட்டி விட்டான்; அசுவமோ நாலுகால் பாய்ச்சலாக ஓடத் தொடங்கிற்று. பாய்மா செல்லும்விசையில், அப்பெண்பால் பரபரப்படைந்துபானையைக்கீழேபோட்டுவிடுவாள் என்று பலரும் கருதியிருந்தனர். பாய்பரியும் மயிரிழை தூரத்தில் அம்மங்கையை நெருங்கிற்று.

உடனே அவள் தந்திரமாகச் சற்றே ஒதுங்கிக் கொடுத்து, எருமையின் கயிற்றை நீட்டிக் குதிரையின் காலில் மாட்டி வலித்த னள். அவ்வளவில் துரகதம் குப்புறச் சாய்ந்தது. சீறி வந்த வாலிபனும் கீழே விழுந்து மண்ணைக் கவ்வினன். மைந்தர் அது கண்டு அப்பெண்பாலிடம் மூன்றும் முறையும் வெட்கிப் போயினர்.

அரண்மனை சேர்ந்ததும், அரசிம் மனுக்கு ஊணிலும் உறக்கத்திலும் உள்ளம் செல்லவில்லை. "அவ் வீரமாது யாவர் மகள்? அம்மங்கையை எங்ஙனம் மணந்து மகிழ்வது?" என்னும் சிந்தனைக்கு அவன் ஆளாகிக் கிடந்தான். பொழுது புலர்ந்த தும், புலம் விசாரிக்கவே, அம்மாது ஓர் ஏழை இராஜபுத்திரனது செல்வமகள் என்று புலப்பட்டது.

அக்கணமே அரசகுமாரன் தன் தோழ ருடன் அவ் வேழையின் வீடு சென்றான். வறியவனே அவ்விளைஞரை வரவேற்று, வந்த கருமம் யாதென வினவினன், விரும்பி வந்த காரியம் இன்னதென ஒருவன் உணர்த்த, ஏழையோ இளவரசின் முகவிலா சங்கண்டு, "என் அப்பனே! நீ அரசிளஞ்

சிங்கமோ?" என்றனன். ஆம் என்று கூறினர் அருகே யிருந்த அன்பர்.

மாதின் மனக்கோளை மதித்துணர்ந்து மறுதினம் விடைதருவதாக விளம்பினுன் அவ்வறியவன். இளவரசனும் துணைவரும் சிறிது ஆறுதலுடன் அரண்மனை திரும்பினர். எனினும் அம்மாது மனம் ஒப்புவளோ, அல்லது மறுப்பளோ, எனும் ஐயுறவு அவர்களிடம் குடிகொண்டது.

அரசிம்மன் அந்த இரவிலே முந்தை இரவினும்மும்மடங்கு சிந்தாகுலம்கொண்டு கிடக்கலானுன். மந்திரி மைந்தன் அஃதறிந்து, அடுத்த நாள் காலையில் ஏழையை வருவித்து, மணம் பேசி, முகூர்த்த தினத்தையும் நிச்சயித்தனன். சுருங்கச் சொல்லின், நல் ஓரையிலே இளவரசனுக்கும் இந்துமதிக்கும் விவாகம் நடந்தேறியது. நாளடைவில் அவ்விருவருக்கும் ஓர் ஆண் மகவு பிறக்க, அதற்கு அமரசிம்மன் என நாமம் சூட்டினர்.

பின்னளில் அமரசிம்மன் மத்தியபதியின் மன்னவனுகி அறுபத்துநான்குஆண்டு ஆண்மையுடன் ஆட்சிசெலுத்தி, அழியாப் புகழ் எய்தினன். அவனது வீரப் பிரதாபம்

கண்டு, இராஜபுத்திரர் அனைவரும் அவனையே குலத்தலைவன் எனக் கொண்டு மகிழ்ந்தனர். தாயைப் போல் பிள்ளை, நூலைப் போல் சீலை என்பது பழமொழி.

---

5. குமாரி கிருஷ்ணவேணி

தர்மமே நிரம்பிய கிருத யுகத்தில் இரேணுகா தேவிகாரணமாக அவனியிலே இரத்த ஆறு ஓடலாயிற்று. மறுயுகத்திலே ஜநக புத்திரியின் பொருட்டு, இராம இராவண யுத்தம் நடை பெற்றது. பின் யுகத்திலே மஹாபாரதப் போர் மூண்டது பாஞ்சாலியின் பொருட்டாக.

வட இந்தியாவிலுள்ள மத்தியபதியிலோ குமாரி கிருஷ்ணவேணியின் நிமித்தம் பத்தொன்பதாம் நூற்றூண்டிலே கோர யுத்தம் நிகழலாயிற்று. அது கண்டு அந் நங்கை தனது ஆவியை விடாமல் இருந்திருப்பின், அத் தேசம் தரையோடு தரையாக ஆகி இருக்கும்.

ஸ்ரீ ராமனது பரம்பரையினர் ஓர் ஆயிரம் ஆண்டுகளாக அம் மத்தியபதியைப் பரிபாலித்து வருகின்றனர். போன நூற்றூண்டின் துவக்கத்திலே அங்கு அரசு கட்டில் ஏறியிருந்தவன் பெயர் மகா ராணு பீம சிம்மன்.

அக்கொற்றவனுக்கு அழகின் அவதார மான குமாரி யொருத்தி இருந்தனள். அந் நங்கையின் பெயர் கிருஷ்ணவேணி. அந் நாளிலே அவளுக்கு இணையான வனப்புடைய வனிதையர் இருக்கவில்லை; ஆதலின் அவளது பேரழகையும் பெரு நலத்தையும் கேள்வியுற்று, மணக்க விரும்பி மன்றாடி நின்ற மன்னரும் மா வீரரும் எண் ணிலர் ஆயினர்.

மத்தியபுரிக்கு அருகே ஜயபுரி என் னும் குறுநாடு ஒன்றுளது. அதன் இறை வன் கிருஷ்ணவேணியின் மணமாலை பெற விரும்பி. ஓலை போக்கினான். மத்தியபதி மன்னவன் அதற்கு மன மிசைவான்போல் தோன்றியது.

உடனேஜயபுரியின் அரசன் ஐயாயிரம் வீரருடன் மணமகளுக்குரிய வரிசை பலவும் அனுப்பி, நிச்சய தாம்பூலம் மாற்றி வர மந்திரியை ஏவினான். அவ்வளவு தான் தாமதம்! இராஜபுதனமெங்கும்கொந்தளிப்பு ஏற்படலாயிற்று.

மாருவாரம் என்பது இராஜபுதனத்தி லுள்ள வேறொரு நாடாகும். அம் மாரு வார மன்னனுக்குத் தன் மகளைத் தருவதாக

மகாராணு முன்னம் எண்ணியிருந்தான். அதற்குள் அப் பார்த்திபன் பரகதி செல்லவே ஜயபுரியின் இறைவனுடன் பீமசிம்மன் மணம் பேச நேர்ந்தது.

மாரு வாரத்திலே அந்தச் சமயம் அரியணையில் அமர்ந்திருந்தோன் இராஜா மானசிம்மன் எனப்படுவான். அம் மான சிம்மன் கிருஷ்ணவேணியின் மீது ஆசை கொண்டு, "பெருமை மிகுந்த பீம! எனக்கு முன்னம் அரியாசனத்தில் வீற்றிருந்தபார்த்திபனுக்குத் திட்டமான நங்கை எனக்கே உரியவள் ஆவாள். மாருவார இராஜ குடும்பத்தில் சம்பந்தங் கொள்ள விரும்பினுய் நீ. இச்சமயம் மாருவாரத்தின் இறைவனுயிருக்கும் எனக்கே உன் மகளைத் தருதல் வேண்டும். இன்றேல் கடும் போர் கிளம்பும்," என்று தூதுபோக்கினுன்.

அக்காலத்தே மத்தியபதி நகமும் பல்லும் இழந்த சிங்கத்தைப் போல் கிடந்தது. பீம சிம்மனது தளகர்த்தரில் பலரும் புரவலனுக்கு அடங்கி நடவாமல் திரிந்து நின்றனர். ஓர் ஐந்நூறு வருடங்களுக்கு மேலாக ஓயாமல் முகமதியருடன் சமர் முறுக்கி வந்ததனுல், மத்தியபதி அலுத்துச் சலுத்துக் கிடந்தது.

மகாராஷ்டிரரோ மத்தியபதியில் புகுந்துகொள்ளையும்கொலையும் கண்டு கப்பம் வசூலித்து வந்தனர். மொகலாய வல்லரசை மடக்கி,வணங்காமுடி மன்னர் வழியில்வந்த பீமனே விதிவசத்தால் மகாராஷ்டிராருக்குத் தலை வணங்கும்படி ஆயிற்று.

மேலும், அமீர்கான் என்பான் ஒருவன் இராஜபுதனத்திலே கைமேலான புருஷனெனக் கர்வித்து நின்றனன். அவனே இராஜ புத்திரரிலே ஒரு சமயம் ஒரு சாராரிடமும், மற்றொருசமயம் மற்றொருசாராரிடமும் நேசங்கொண்டு, தேசத்தைத் தலைவிரிகோலம் கண்டது கொஞ்சம் அன்று. அத்தகைய நிலையிலே இராஜபுதனத்தில் கிருஷ்ணவேணிக்காகக் கடும் போர் நிகழலாயிற்று.

மகாராஷ்டிரரிலே மிக்க பராக்கிரமம் படைத்திருந்த மகதாஜி சிந்தியா என்பான் மாருவாரமன்னவனுக்குத் துணையாக இருந்தனன். அமீர்கானே பீமசிம்மனது நண்பனைப் போல் நடிக்கத் தலைப்பட்டான். இராஜபுதன வீரரில் பலரும் ஜயபுரியின் காவலனும் ஜகத்சிம்மனுக்குப் பக்க பலமாக இருந்தனர்.

மகதாஜி சிந்தியா பதிஞயிரம் வீரருடன் வந்து, உதயபுரிக்கு அருகே பாசறை சமைத்துத் தங்கலாயினன். ஜயபுரி அரசின் ஓலையை உதறித் தள்ளி, மான சிம் மனேயே பீமன் மண மகளுகக் கொள்ள வேண்டும் என்று கூறி, சிந்தியா சீறி நின் ருன். அங்ஙனம் நடவாவிடின், உதயபுரி யைத் தீக்கு இரையாக்க மகாராஷ்டிரர் தயா ராக இருந்தனர்.

மகாராணு பீம சிம்மன் யாது செய் வான்? மகாராஷ்டிரரை எதிர்த்து நிற்பதற் குரிய துணைவலி இல்லை. ஆதலின் உதயபுரி வேந்தன் வேறு வகையின்றி ஜயபுரியின் தூதைப் புறக்கணிக்க நேர்ந்தது. ஜகத் சிம்மன் அதுகண்டு சீற்றங்கொண்டு, இராஜ புதனத்தில் அன்றளவும் திரண்டிராத மா பெரும் சேனையுடன் கிளம்பி வந்தான் பழி வாங்க.

மாருவார மன்னவனும் சிந்தியாவின் துணைகொண்டு வந்தனன் தன் படைக் குழாத்துடன். உடனே மிகவும் கோரமான யுத்தம் நிகழத் தலைப்பட்டது. அப் போரிலே இரு திறத்திலும் ஆவி துறந்த வீரருக்குக் கணக்கில்லை. எனினும் எத்திறத்

தினருக்கும் வெற்றிமாலை கிட்டாது போயிற்று. இருபக்கத்தாரும் கிருஷ்ண வேணியின் மாலைக்காக மன்றாடி நின்றனர்.

இந்நிலையில் அமீர்கான் ஒரு யோசனை சொல்லலானான். இத் துணை இழவுக்குக் காரணமான குமாரியைக் கொலை காண வேண்டும் என்பதே அவனது யோசனை யாகும். அருமந்த மகளின் ஆருயிரை வாங்க எத்தந்தை மன மொப்புவான்?

பீம சிம்மனுக்கே மதி மயங்கிற்று, ஆவி சோர்ந்தது, உடலம் ஒடுங்கியது. பெண்ணை உயிர் கவராவிடின் இராஜபுதனம் சீரழிதல் திண்ணம். யாருக்கேனும் ஒரு வருக்கு அக்குமரியை மணம் புரிவிப்பின், உதயபுரி நிர் மூலம் ஆதல் தேற்றம். மகா ராணாவின் மயக்கம் கண்ட அமீர்கானே, "கிருஷ்ணவேணியின் உயிரை வாங்கா விடின், உதயபுரியைப் பொடியாக்கி, அந்தப் புரத்தில் புகுந்து அல்லல் இழைப்ப" தாக அச்சுறுத்தினன்.

இருதலைக் கொள்ளி எறும்பு போல் எத் தனை நாள் மகாராணா துடிக்கமுடியும்! முடி விலே கிருஷ்ணவேணி சாகவேண்டும்என்று தீர்ப்புப் பிறந்தது. ஆனால் அவளை ஆவி

கவர்வது யார்? அழகும் குணமும் ஒருங்கே திரண்டு,பூங்கொடிபோல் துவண்டு நிற்கும் குமாரிகிருஷ்ணவேணியின்மார்பகத்தில் ஈட்டியைச் செருக யாவரே மனம் துணிவர்? அல்லது வாள்கொண்டு அவள் சிரத்தைத் துணிக்க எவன் துணிவு கொள்வான்?

இராஜவமிசத்தில் வந்த தௌலத் சிம்மன் என்பானை அழைத்து அக் கொடுந் தொழில் புரியுமாறு ஏவினர். அவனோ, "ஐயகோ? கிருஷ்ணவேணியின் உயிரை வாங்க வேண்டும் என்று கூறுவோரின் பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்டம் காண்பேன். பச்சைக் குழந்தையைக் கொன்று உதயபுரியைக் காக்க வேண்டும்?," என்று கூறி மறுத்து விட்டனன்.

பின்னர் ஜோவன்தாஸ் எனும் கல் நெஞ்சன் அக்கொடுஞ் செயல் புரிய மனமொப்பினன். அவன் அந்தப்புரம் குறுகி, குமாரியின் அறைக்குள் புகுந்தான். அது கண்டு, கிருஷ்ணவேணி எழுந்து நின்று, "எந்தாய் வருக, வந்தனம்" என்றனள்.

"பெண்ணே, இன்றோடு உன் உலக வாழ்வுதீர்ந்தது," என்றான் ஜோவன்தாஸ். குமாரி அது கேட்டுப் புன்னகை பூத்து,

"இளங் குழந்தையுடன் விளையாட நினைவு போலும்!" என்றனள். அப்பாவி, "மங்காய், யான் சொல்வது மெய்யே. ராணுவின் கட்டளையும் அஃதாம். உன் ஒருத்திக்காக எங்கள் இராஜபுதனம் மாண்டு மடிவதோ?" என்றனன்.

பேதைப்பெண் அது கேட்டுச் சற்றே கலங்கி நின்றனள். அப்பால், "எந்தாய், யான் தயார். என் பொருட்டு நம் தேசம் சீரழிதல் வேண்டாம்; சிறப்புஎய்தலே வேண்டும்" என்று அகமும்முகமும் மலர்ந்து கூறினள்.

உடனே அக்கொடியோன் தனது ஈட்டியை உருவிக்கொண்டு, கிருஷ்ண வேணியை நோக்கினன்; நோக்கியவளவில் அவனுக்கோ அங்கமெல்லாம் நடுங்கிற்று; கைதனிலிருந்த ஈட்டி கீழே விழுந்தது; தலையும் கிறு கிறுப்புக் கொண்டது. உடனே அப்பாதகன் பித்தனைப் போல் ஓடி விட்டான்.

பின்னர் அக்கொடுஞ் செயல் புரியப் பலரை வேண்டிக் கொண்டும், ஒருவரும் உடன்படவில்லை. இதற்கு இடையில் கிருஷ்ணவேணியின் தாயார் வாய்விட்டு அலறி, "அந்தோ! அழகின் கனியை

இக்கொடுமை காணவா பெற்றெடுத்தேன்?" என்று கூறி, மகாராணுவை வேண்டிக் கொண்டனள்.

முடிவிலே விஷமிட்டு வேலை தீர்ப்ப தென்று தீர்மானம் ஆயிற்று. அங்ஙனமே மதுரசத்தில் நஞ்சு கலந்து கிருஷ்ண வேணிக்குக் கொடுத்தனர். பெற்ற அன்னை அது கண்டு அரற்றி அழுதாள்.

கிருஷ்ணவேணி கூறுவாள்:- "என் அன்னாய், இக்கலக்கம் ஏன்? பாவத்தின் பயனுகவே யாவருக்கும்பிறவி வாய்த்துளது. உலகவாழ்விலே பல கஷ்டங்கள் உள. ஆதலின், இவ்வாழ்வு விரைவில் வீழ்தல் மிகவும் நலமே யன்றோ! இதற்கு நீயும் நானும் களிப்பே கொள்ளல் வேண்டும். கண்ணீர் வடித்தல் ஒண்ணுது. இனி, சாவு கண்டு யான் அஞ்சவில்லை. சாவுக்கு அஞ்சு வோர் பேடிகள் ஆவர். பிறந்தவுடனே சாவும் நமது பிடரியில் குந்தி யிருக்கிறது. என் தாயே, நம் மத்திய பதியைக் காக்க வேண்டி, எனக்கு முன்னம் எத்தனையோ நங்கைமார் தம் ஆருயிரை ஆர்வமுடன் வழங்கியுள்ளார். அடியேன் எம்மாத்திரம்? நாட்டின் நலத்திற்காக இன்னுயிரை ஈயும்

பாக்கியம் எனக்குக் கிட்டியதென நான் மகிழ்கின்றேன். என் பொருட்டு ராஜபுதன மெங்கும் இரத்த ஆறு ஓடுவதோ? முழு மனத்துடன் உயிர் விடுவேன்," என்று கூறி, விஷம்கலந்த கோப்பையை வாங்கி,பரமான்னம் பருகுவது போல் பருகி மகிழ்ந்தனள்.

ஆயினும் கொடிய நஞ்சோ அக்குமாரிக்கு யாதோர் ஊறும் விளைக்கவில்லை. எனவே மீண்டும் அவளுக்கு விஷம் கொடுத்தனர். அதுவும் பலன் தரவில்லை. மேலும் மூன்ருவது முறையாக நஞ்சூட்டிப் பார்த்தனர். அப்போதும் விஷம் வலியற்றுப் போய் விட்டது.

எழில் நலத்தின் இருப்பிடமான இனிய கிருஷ்ணவேணியின் ஆருயிரை வாங்க அக்கொடிய நஞ்சும் கூசிக் கலங்கியது போலும்! ஆனல் அமீர்கானே சிறிதும் கலங்கினனில்லை. முடிவில் நாலாவது முறையாக நஞ்சு தந்தனர். கிருஷ்ணவேணி அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்து, அந் நஞ்சினை அருந்தி அயர்ந்தனள்.

அவளது அன்னையோ மனம் தாளாமல் ஒருவாரத்திற்கெல்லாம் ஆவி நீத்தாள். அமீர்கானும் சின்னளிலே அந்தகன் உலகு

சென்றனன். கிருஷ்ணவேணி தீர்ந்தபின்னர் ராஜ புதனத்திலே கொடும் போரும் தீர்ந்தது.

6. அரிவை அஷாமான்யை

——(:)——

பொன் மகளின் வாழ்விடமான ஆரியா வர்த்தம் முன்னம் ஐம்பத்தாறு தேசங்களாகவகுக்கப்பட்டிருந் தது. அவற்றிலே வங்க தேசம் சாலச் சிறந்த தாம். கங்கை, யமுனை, பிரமபுத்திரா ஆகிய மூன்று பெருநதிகள் அத்தேசத்தின் வளத் தையும் வலியையும் அன்று முதல் இன்றள வும் பெருக்கி வருகின்றன.

முன்னம் ஓர் இருநூறு வருஷ காலம் அத்தேசம் மொகலாயரின் ஆட்சிக்கு உட் பட்டிருந்தது. அவ்வல்லரசு சீர் குலையவே, அலிவர்திகான் என்பான் அத் தேசத்தைத் தன் வசமாக்கிக்கொண்டான். அவனுக்குப் பின் 1756-ஆம் ஆண்டிலே வங்கத்தின் அதிபதியாக அரியணை ஏறியவன் ஸ்ரீ ராஜ தௌலன் எனப்படுவான். சிம்மாசனத்தில் அமருங் காலையில், ஸ்ரீ ராஜனுக்கு வயது மூவெட்டே.

குழந்தைப் பருவம் முதல் அவனைத் தாய் தந்தையர் செல்வமாக வளர்த்து

வந்தனர். துள்ளித் திரிகின்ற காலையில் துடுக்கை யடக்கி நல்வழிப்படுத்த அவன் பெற்றோர் மறந்து விட்டனர் போலும். பாலப் பருவம் நீங்கியது முதல் அவன் வீணரோடும் விடரோடும் சேர்ந்து, மதம் பிடித்தகளிறேபோல்காலங்கழித்துவந்தான்.

அரியணையில் அமர்ந்த வுடனே அவனது தீச் செயல்களும் காமக்குரோதங் களும் ஓங்கி வளர்ந்தன. மிகப் பெரிய பூப் பரப்பின் நிர்வாகப் பொறுப்பு தன் தலையில் சுமந்திருப்பதை அவன் எங்ஙனம் உணர் வான்? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமோ?

அழகும் இளமையும் வாய்ந்த அரிவை யரைக் காணின், அக்கணமே ஏவலாளரை அனுப்பி எடுத்துச் செல்லுதல் அவனது இயற்கை. கணவரின் முன்னிலையில் மனைவி யரை அவன் மானபங்கம் காண்பான். பெற்றோரின் கண்ணெதிரே பெண்களின் நலத்தைப் பருகுவான்.

மகளிரின் நிறை குணம் என்பதைத் தன் தேசத்தை விட்டுத் துரத்திவிட அத் துராத்மா கங்கணம் கட்டிக் கொண்டனன் போலும்! தனது அரசில் பெரும் பதவி

வகிக்கும் படைத் தலைவர், மந்திரிமார் முதலிய பெருமக்களின் மகளிருக்கும் அத்தகைய கதியே நேரலாயிற்று.

அக்காலத்திலே ஜகத்சேட் என்னும் பட்டம் படைத்த கோடீசுவரன் ஒருவன் அத்தேசத்தில் இருந்தான். அத்தனிகனுக்குத் தேச மெங்கும் காசுக்கடை உண்டு. மொகலாய சக்கரவர்த்திகளும் ஏனைய மன்னரும் அச் சீமானிடம் கடன் வாங்குவது வழக்கம். எனவே, அரசவைகளில் அப் பணக்காரன் மிக்க மதிப்பும் செல்வாக்கும் பெற்று விளங்கினான்.

அச்சீமானுக்கு அஷாமான்யை என்னும் ஏக புத்திரி இருந்தனள். அந் நாளில் அவளையே அழகின் அவதாரமென அனைவரும் எண்ணி இருந்தனர். ஸ்ரீராஜன் அவள் மீது கண் வைக்கலானான். மாய வழியில் அவளை அபகரிக்க வகையில்லை. பகிரங்கமாக எடுத்துச் செல்லவும் அவனுக்கு நெஞ்சுரப்பு இல்லை.

மத்தியபதி மாதரசியாம் பத்மினியைக் கண்ணாடியிலேனும் கண்டு ஆசை தணிய அலாவுதீன் பாடு பட்டது போல், அஷாமான்யையை ஒரு முறையேனும் நயனங்

கொண்டு அழகைப் பருக ஸ்ரீ ராஜன் ஆவல் கொண்டனன்.

அம்மங்கை நல்லாள் படி தாண்டாப் பத்தினி. ஆதலின் அவ்வேந்தன் ஒரு நாளிரவு பெண் வேடம் புனைந்து கொண்டு, அப் பெருமானது வீட்டில் புகுந்தான்; உயர்குல மாதொருத்தி வருவதாக எண்ணி, வாயில் காவலர் வழி விட்டனர். ஸ்ரீ ராஜன் அந்தப்புரம் சென்று, அம்மகளுடன் உரை யாடலானான். வீடேறி வந்த பெண்பாலைப் பரிவுடன் வரவேற்று உபசரணைபுரிய அஷா மான்யை பின்வாங்கவில்லை.

அனலின் அருகே செல்லின், நெய் உருகுவது போல், அப் பெண்ணரசியைக் கண்டதும் அவன் தன்னை மறந்து, அவளுக்கு ஊறு செய்ய முயன்றனன். உடனே அவள் தனது காலில் தரித்திருந்த பாதரட்சையைக்கொண்டு அவனுக்குப் புத்தி புகட்டத் தலைப்பட்டாள்; அவளது கண வனும் வந்து கலந்து கொண்டு, நையப் புடைத்தான்.

ஸ்ரீராஜன் உயிர் தப்பினால் போதுமென எண்ணித் தனது இழி நடையைப் பிறர் அறியு முன்னர் அரண்மனை போய்ச்

சேர்ந்தான். ஆயினும் அவ் வேந்தனுக்கு நன்மதி பிறக்க வில்லை. மூர்க்கமும் கோபமுமே மிகுந்து நின்றன.

நாள் சில சென்றதும், அஷாமான்யை யின் கணவன் இராஜவீதியிலே கடும் பகலில் கொலை யுண்டனன். அது ஸ்ரீ ராஜனது வஞ்சனை விளைவென நாம் சொல்லவும் வேண்டுமோ? அஃதுடன் அப்பாவி நிற்க வில்லை. தலையைத் துண்டித்து அதனை ஒரு தங்கத் தட்டில் வைத்து, அஷாமான்யைக்கு அனுப்பினன் வரிசையாக.

அக் கொலை நிகழ்வும், தலைவரிசையுங் கேட்டு வங்கத்திலே நடுங்காத மக்கள் இல்லை. நவாபு ராஜ்யத்தில் யாவரே வாய்திறந்து பேசுவார்! ஆயினும் நகரப் பெருமக்கள் உள்ளூரக் கொதித்து நின்று, கொடுங் கோலனது வாழ்வைத் தொலைக்க வகை தேடலாயினர். அஷாமான்யையோ அக் கணம் முதல் அறிவிழந்து பித்தியானுள்.

மருத்துவ வல்லாரையும் மறையவரை யும் ஜகத்சேட் வருவித்து மணி மந்திர ஔஷதங்களைக் கொண்டு பார்த்தும், அவ ளது உன்மத்தம் நீங்கவில்லை. கற்புடைய மங்கையர் கண்ணீர் வடிப்பின், பேரரசும்

வீறழிந்து வீழும் என்பதை ஸ்ரீ ராஜன் எங்ஙனம் அறிவான்?

அத்தேசத்தின் சிற்றரசர் ஒருங்கே கூடி அவனை அரியணையி லிருந்து அகற்ற முயலா நின்றனர். அத்தருணம் ஸ்ரீ ராஜனது சேனாபதியான மீர் ஜாபர் என்பான், இங்கு வியாபாரம் செய்து பொருளீட்ட வந்திருந்த ஆங்கிலவர்த்தகக்கூட்டத்தாரின் துணையை நாடி, அரசை வவ்வக் கருதினான்.

கஞ்சிவரதப்பா என்றால் எங்குவரதப்பா என்று காத்திருந்த அக் கூட்டத்தின் தலைவரான கிளாவ் என்பார் தமது படையுடன் புறப்பட்டனர். ஸ்ரீ ராஜனும் தீரமுடன் தனது சேனை கொண்டு கிளம்பினான். எனினும் இரணகளஞ்சேர்ந்தவுடனே சேனாபதி அக்கிளைவுடன் கூடிக் கொண்டனன்.

ஆதலின் ஸ்ரீ ராஜன் வேறுவகையின்றி, ஓர் ஆயிரவரே பின் தொடர, யுத்தகளத்தை விட்டு உயிருக்கஞ்சி ஓட நேர்ந்தது. அவனை உயிருடன் விடின், ஆபத்து விளையுமென மீர் ஜாபரும் கிளைவும் உணர்ந்து, சிறை செய்து கொணரும் வண்ணம் ஒருபடையை அனுப்பினர்.

படை தொடர்ந்து வருவதைக் கண்டு, ஆயிரவரில் ஒருவர் தவிர ஏனைய அனைவரும் அவனைக் கை விட்டுப்போயினர். உற்றார் உறவினிரிடம் சரண்புகப் பார்த்தும், அவர்களும் அடைக்கலந் தரவில்லை. நிழல் போல் அவனைத் தொடர்ந்து சென்றவள் அவனது அருமை மனைவி ஒருத்தியே.

துன்மார்க்கத்தில் கிடந்துழன்ற காலத்தில் அவளை அவன் கண்ணெடுத்துப் பார்த்தது கிடையாது. ஆயினும் அவள் உத்தமியாதலின், தன் பதியைப் பின் தொடர்ந்து போயினள். இஃதே கற்புடைய மங்கையரின் இயற்கைக் குணம்.

தொடர்ந்துவந்த படையோ அப்பெண் கருக்கொண்டிருப்பதைக் கண்டு, அவளுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்து, ஸ்ரீ ராஜனை மட்டும் சிறை செய்து, தலையைக் கொய்து, உடலத்தையும் சிரத்தையும் ஒருங்கே மீர் ஜாபரிடம் சேர்த்தது.

மீர் ஜாபர் அது கண்டு ஆனந்தங் கொண்டு, அச்சவத்தை ஓர் யானையின் மீதேற்றி நகர்வலஞ் செய்வித்து, பாவியின் கதியைப் பாரோருக்கு அறிவித்த பின்னர் அடக்கஞ் செய்ய ஆக்கினை தந்தனன்.

அவ்வேளை அஷாமான்யையின் தாதியர் அவளைக் கல்லறைக்கு அழைத்துச் சென்று, அச்சவத்தைக் காட்டி, "எங்கள் அன்பே, பார்த்தனையா உன் பதியைக் கொன்றவன் கதியை?" என்று கூறினர்.

அது கேட்டு அஷாமான்யை பெரிதும் கலக்கம் கொண்டு "அந்தோ! கோரக் காட்சி போதும் போதும்; என்னை உடனே மாளிகைக்கு இட்டுச் செல்லுங்கள்" என்றனள். அங்ஙனமே தாதியர் அந் நங்கையை அந்தப்புரம் அழைத்துச் செல்ல, முன் போல் அவள் தாய் தந்தையருடன் பேசத் தலைப்பட்டாள்.

ஆயினும் ஒரொரு சமயம், "ஈச! அடியேன் ஆற்ற வேண்டிய கடனை ஆற்றி விட்டனே. உனது கடமையை நீ செய்ய வில்லை ஆதலின், உன் கடனை ஆற்றி, ஆறுதல் கொள்ள எனக்கு அருள் சுரப்பா யாக," என்று அவள் பிதற்றுவது வழக்கம். அவ்வுரையின் உட் கருத்தை ஒருவரும் உணரவில்லை.

ஒரு தினம் நள்ளிரவில் அஷாமான்யை ஒருவரும் அறியா வண்ணம் மாளிகையை விட்டேகினள். பதியைக்கொன்ற பாவியின்

சவக்குழியைக் கண்டதும், " அந்தோ! என் கணவனைக் கொலை கண்டு மகிழ்ந்த கொடியோனை யான் எனது கையினால் பழிவாங்கி மகிழ்ந்திருக்க வேண்டும். ஆயினும் ஆண்டவனே அந்த என் பணியை இயற்றி விட்டான். அந்த ஆண்டவனுக்குக் கருணையில்லையோ? பாவிதான் போயினன், அப்பாவிக்கு வாழ்க்கைத் துணையான மங்கை நல்லாள் ஆதரிப்பாரின்றிக் கருவுயிர்த்துக் கைக் குழந்தையுடன் காலந்தள்ள வகையின்றிக் கலங்குகின்றனளே. அவளைக் கண்டு பிடித்து, அவளுடன் சிசுவையும் இரட்சித்தல் வேண்டும். இப்பணியைப் பிரமன் என் தலையில் சுமத்தியிருக்கின்றான்," என்று சொல்லிக் கொண்டே நாடு நகரமெங்கும் திரியலாயினள்.

ஸ்ரீ ராஜன் சிறையான நகரம் வந்து அவள் விசாரிக்க, அயல் கிராமத்திலே ஓர் ஏழையின் அகத்தில் ஸ்ரீ ராஜனது மனைவி தனது சிசுவுடன் வசித்து வருவதாகத் தெரிய வந்தது. உடனே அவ்வூர் நோக்கிப் பயணமாயினள் அஷாமான்யை.

ஸ்ரீ ராஜன் மனைவியான துலாப் என்பாளோ தன்னை யாரோ வேற்று மனிதர்

விசாரிக்கின்றனர் என்று கேட்டு, "அந்தோ! கணவனைக் கொலை செய்த பாவியர் இக்குழந்தையையும் கொலை புரிய வருகின்றனர் போலும்" என்று அஞ்சி மற்றோர் ஊருக்கு ஓடினள்.

அங்ஙனம் குலாப் ஊர் ஊராய் ஓட, அஷா மான்யையும் அவளைத் தொடர்ந்து போயினள். ஒன்றரை மாதகாலம் அவ்விதம் ஓடியபின், இலட்சுமணபுரிக்கு அருகிலுள்ள கிராமம் சேர்ந்தாள் குலாப்.

அப்போது சண்டமாருதம் வீசத் தொடங்கியது. அதன்பயனாக மரங்களெல்லாம் வேர் பிரிந்து விழலாயின; கூரை வீடுகள் இடிந்து வீழ்ந்தன. வழியில் நடக்கும் ஆடவரையும் வாயு பகவான் தூக்கிச் செல்வான்போல் காணப்பட்டான். ஆதலின் ஊரார் அனைவரும் புயலுக்கு அஞ்சி வீட்டுக்குள் பதுங்கிக் கொண்டிருந்தனர். சுழல் காற்றையும் அந்திப்பொழுதையும் கவனியாமல் குலாப் விரைந்துஓடினாள். அவளை அஷா மான்யை நெருங்கிவிட்டனள்.

அது கண்டு குலாப் மதி கலங்கி, ஆற்றங்கரை குறுகி, படவோட்டிகளை

நோக்கி, "ஐய! என்னை அக்கரை சேர்ப்பின் கையிலிருக்கும் கணையாளி தருவேன்" என்று இரந்து வேண்டினள். ஸ்ரீ ராஜனது அடையாளமாக இருந்த ஆழி போனாலும் போகட்டும், அக்கரை சேர்ந்து தப்ப வேண்டும் என்பதே குலாபின் கவலை ஆயிற்று.

படவோட்டியும் பணத்துக்கு ஆசைப்பட்டு, புயலின் கடுமையைப்பாராமல், துடுப்புக் கொண்டு ஆற்றில் இறங்கினன். சிறிது தூரம் படகு சென்றவுடனே, பேரலைகளின் மீது படகு தவழ்ந்து தள்ளாடும் சமயம் அஷாமான்யை கரை குறுகினாள். குறுகியதும் படகோ கவிழ்ந்து விட்டது பெரு வெள்ளத்தில், பார்த்தனள் அஷாமான்யை; உடனே பொத்தென்று நீரில் குதித்தாள்.

குலாபின் படகு கவிழ்ந்த இடத்தை அஷா மான்யை அடைந்து, கை கொண்டு தடவிப் பார்க்க, நீண்ட கூந்தல் கைக்குப் பரிசமாயிற்று. உடனே அதன் மூலம் குலாபைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, அலையையும் காற்றையும் சட்டைசெய்யாமல் அஷாமான்யை நீந்தலானாள். நல்ல வேளை

யாகச் சிறிது நேரத்திற் கெல்லாம் காற்று ஓய, அலையும் ஒடுங்கியது.

உடனே அஷாமான்யை கரை குறுகி, குலாபை நோக்கினள். குலாபுக்கோ உயிர் இல்லை. குழந்தையை எடுத்துப் பார்க்க முயலுகையில், மார்பில் இறுகக் கட்டிக் கொண் டிருந்ததனால், சிசுவை இலகுவில் எடுக்க முடியவில்லை.

முடிவில் வெகுபிரயாசைப்பட்டுச் சிசுவை எடுத்து நோக்க, அதற்குத் தொண்டைக் குழியில் உயிர் துடித்துக் கொண்டிருந்தது. ஆண்டவனை நினைத்து வணங்கி, சைத்தியோபசாரம் செய்யவே, குழந்தை உயிர் பெற்றுக் கத்தத் தொடங்கிற்று. உடனே அஷாமான்யை அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை.

அப்பால் அதன் தாயின் உடலை எடுத்து அடக்கஞ் செய்து விட்டு, அக் குழந்தையை நோக்கி, “என் கண்ணே, பெண் ஆசையின் மிகுதியால் உன் தந்தை படாத பாடு பட்டனன். பட்டுப் பட்டாயினும் தேறுவனோ என்று உன் அன்னை எதிர்பார்த்தும், அவன் தேறவில்லை. வினையின் வலியால் அவன் கொலையுண்டான்.

நீயும் உன் தாயும் நிர்க்கதியாக நிற்பதைக் கண்டு, உங்கள் இருவரையும் காக்கக் கருதி வந்தேன். உன் தாயோ என்னைப் பகை யென எண்ணிப் பதறி எங்கும் ஓடினள். நானும் விடாது தொடர்ந்து வந்து உங்கள் இருவரையும் காக்க முயலுகையில், நீ மட்டும் உயிர் தப்பினுய். கவலைப் படாதே. இனி யானே உனக்குத் தாய்'' என்று கூறி, அக் குழந்தையைப் பரிவுடன் வளர்த்து வந்தனள். அவ்விருவரையும் வங்க மாதர் இன்றும் தெய்வம் போல் சிந்தித்துப் போற்றியும் கொண்டாடி வருகின்றனர்.

6003

7. இராணி இராஜேசுவரி

—:[o]:—

நலம் பல பயக்கும் கங்கா தீரத்திலே வங்காள தேசம் இருக்கின்றது. முன்னாளிலே சிறிதுகாலம் அத்தேசத்தைப் பட்டாணியர் என்போர் ஆண்டு வந்தனர். கடைசியில் ஆங்கு அரசு செலுத்தியவன் பெயர் சுலேமான்.

மொகலாயவமிசத்தைச் சேர்ந்த அக்பர் சக்கரவர்த்தி டில்லியிலே அரியணையில் அமர்ந்த பொழுது, வட இந்தியா முழுவதும் அவனது ஆளுகைக்கு உட்பட்டது. ஆயினும் வங்கமோ தலை வணங்க வில்லை. உடனே அக்பர் ஒரு பெரும் படையை அனுப்பி, சுலேமானைப் போரில் புறங் கண்டனன்.

சுலே மான் அப்போரிலே ஆவியிழக்க நேர்ந்தது. அது கண்டு சுலேமான் மைந்தன் தாவூத்கான் என்பான் வங்கத்திலுள்ள ஜெஸ்ஸோர் என்னும் நகரம் சேர்ந்து, தனது அமைச்சன் மாளிகையில் தன் உடைமையுடன் சரண் புகுந்தனன்.

மொகலாயரின் பெருமித வெற்றிகண்டு, வங்கத்திலே மக்களுக்குள் கிலி தோன்றி யிருந்தது. ஆயினும் அமைச்சனே தனது உயிரைப் பொருட்படுத்தாமல் அன்புடன் அடைக்கலங் கொடுத்தான்.

தாவூத் கான் அதன் பொருட்டு அமைச்சனுக்கு இராஜா என்னும் பட்டம் அளித்து, வங்கத்தின் தென் பாகத்தையும் ஈந்தனன். அன்று முதல் அமைச்சனை அனைவரும் இராஜா விக்கிர மாதித்தன் என்று அழைத்து வந்தனர்.

சின்னாள் சென்றதும், மொகலாயச் சேனை தாவூத்கானை நோக்கிப் புறப்பட்டது, தாவூத்கான் மனந்தளராமல் ஒருபடையுடன் சென்று, அச்சேனையை எதிர்த்து அரும் போர் விளைத்தான். ஆயினும் முடிவிலே மொகலாயர் அவனைக்கொன்றுபோட்டனர்.

பின்னர் இராஜா தோடர்மால் என் பான் வங்கத்திலே மொகலாய அரசின்பிரதி நிதியாகச் சிம்மாசனம் ஏறினன். வங்கத்தி லிருந்த சிற்றரசரும் குறு நில மன்னரும். ஒருங்கே கூடி, அத்தோடர் மல்லை எதிர்த்து நின்று, தோல்வி காணுமல் ஒன்றரை யாண்டு ஓயாப்போர் தொடுத்தனர்.

மொகலாயப் பிரதிநிதியோ போர்முனையில் வெற்றி கொள்ள முடியவில்லை. முடிவிலே அவன் சாமோபாயத்தில் இறங்கி, சிற்றரசரான இந்துக்களுடன் நேசங்கொண்டனன். ஆண்டு தோறும் ஓரளவு தொகை மொகலாயவரசுக்கு இறையாக அனுப்பிவர அவ்வேந்தர் உடன்பட்டனர்.

இராஜா விக்கிரமாதித்தனும் ஏனையவரசரைப்போல் அதற்குச் சம்மதித்தனன். அவன் தனது குடிமக்களிடம் அன்பும் அருளும் கொண்டு நடந்து வரவே, நாடு நலம் பல பயந்தது. அது கண்டு விக்கிரமாதித்தன் களித்தனன்.

நாளடைவில் அவ்விக்கிரமன் விண்ணேற, அவன் மைந்தன் பிரதாபாதித்தனுக்குப் பட்டம் கிடைத்தது. பிரதாபன் பெருவீரன்; ஆண்மை மிகப் படைத்தவன். ஆதலின் அவனது அரசு செழித்துக் கொழிக்கலாயிற்று. அவன் மனைவியின் பெயர் இராஜேசுவரி.

அவள் அழகும், நலமும், குணமும் ஒருங்கே படைத்தவள். அன்னாரின் குல தெய்வமும் இரஜேசுவரி எனப்படும். ஒரு தினம் அக் குலதெய்வம் அரசியின் கன

விலே தோன்றி, "பெண்ணே, உன் மாமனைக் கடைக்கணித்தேன். அவன் அமைச்சனாயிருந்து அரசன் ஆயினன்; ஆன்ற அறிவும் நிரம்பிய ஞானமும் கொண்டு அவன் நாட்டினைப் பரிபாலித்து வந்தான். உன் கணவனும் அங்ஙனமே நேர்மையாக நடப்பின், எனது அருள் நிரம்பி நிற்கும். பிரதாபன் பிறழ்ந்து நடப்பனேல், வந்தது மோசம்," என்று சொல்லிப் போந்தனள்.

அன்று முதல் அரசி இராஜேசுவரி அரசின் நலத்திலும்கா ந்தனதுகுணத்திலும் கருத்துச் செலுத்தி வந்தனள். பிரதாபன் ஆதியிலே நேர்மையுடன் நீதி வழங்கி வந்தான். நாளடைவிலோ வினைப் பயனால் அவன் மனம் மாறுபடலாயிற்று.

மாறுபடவே, அருகில் உள்ள ஜமீந்தார்களையும் வருத்தி அவன் பணம் சேர்த்தனன்; போர்த்துகல் தேசத்தைச் சேர்ந்த கடல் கொள்ளைக்காரரையும் பர்மியக் கள்ளரையும் அமர்த்தி, கங்கை நதியில் செல்லும் படகுகளையும், கப்பல்களையும் வியாபாரச் சரக்குகளையும் கொள்ளையாடினன்.

இராஜேசுவரி அது கேட்டு நடுநடுங்கி, அவ்வேந்தனை யடைந்து அரும் போதம் புகட்டினாள். அவனோ இறுமாப்பினால் அப் போதத்தை ஏற்றுக்கொள்ள வில்லை. குல தெய்வத்தின் எச்சரிக்கையை உணர்த்தி அவ்வரசி அச்சுறுத்தியும் பார்த்தனள். அதற்கும் அவன் காது கொடுக்கவில்லை.

அவனது படைவலி பெருமிதங் கொள்ளவே, மொகலாய வரசையும் அவன் மதிக்காது போனான். அதன் முடிவாக அவன் கப்பம் கட்டவுமில்லை; அக்பரைச் சக்கரவர்த்தி யாகப் பாராட்டவும் இல்லை. தோடர்மால் அது கண்டு காலங் கருதி யிருந்தனன் கடும் போர் விளைக்க.

பிரதாபனோ அயலகச் சிற்றரசரைக் கொள்ளை கொள்வதுடன் நில்லாமல், தன் சிற்றப்பன் வஸந்தராயையும் நாசஞ்செய்யக் கருதினான். வஸந்தராய் மகா விருத்தன்; பெரிய விவேகி. தந்தையைப் போல் அனை வரும் அவனை மதித்து வந்தனர்.

வஸந்தராய் தனது சோதரன் மகனது தீச்செயல் கண்டு, உள்ளம் விண்டு, பிரதாப னுக்கு மதி புகட்டினான். ஆயினும் பிரதா பன் மதோத் மத்தனாகவே இருக்கலானான்.

குடி மக்கள் அது கண்டு பிரதாபனிடம் உள்ளூர வெறுப்புக் கொண்டனர்; ஆனால் பிரதாபனைப் பகிரங்கத்தில் போற்றி வந் தாரென நடித்தார்கள்.

பிரதாபன் அதனை உய்த்துணர்ந்து, "இனி வஸந்தனை விண்ணேற்றி விட வேண்டும்; இல்லையேல் நமது மக்கள் அவனை அரியணையில் ஏற்றி நம்மை வெருட்டி விடுவர்" என்று கருதி, அவ் விருத்தனைக் குடும்பத்துடன் கொலை புரியச் சதி செய்யலாயினன்.

இராஜேசுவரி அது கேட்டு அகம் குலைந்து, அக்கொலையைத் தடுக்க முயன்ற னள். முதலிலே கணவனது காலைப் பிடித் துக்கொண்டு வேண்டிப் பார்த்தாள். மூர்க் கனும் முதலையும் கொண்டது விடுமோ?

பின்னர் புராதன முறையில் இறங் கினள். அந்நாளிலே வீரமாதர் மேற்கொள் ளும் வழி யொன்றுண்டு. தனது காரியம் ஈடேறவேண்டின், வீரரின் மத்தியில்தனது கங்கணத்தை எறிந்து, "வீரர்காள், எனது மனக் கோள் இஃது. இதனை நிறைவேற்று வோன் எனது சோதரன் ஆவன்" என்று அம்மாதர் அறிவிப்பது வழக்கம்.

சுத்த வீரர் உடனே அக்கங்கணத்தை வாழ்த்தி எடுத்துப் புஜத்தில் அணிந்து கொண்டு, தங்கள் உயிரையும் பொருட் படுத் தாமல் அக்காரியத்தைச் சாதித்துப் புகழ் பெறுவர்.

ஒரு தினம் பிரதாபன் கொலுவீற்றிருந் தான். தாதி யொருத்தி அச்சபையில் புகுந்து, கங்கணத்தை வீசி எறிந்தனள். அவையோர் அதுகண்டு வியந்து நின்றனர். அரசனும் திடுக்கிட்டான். உடனே அவ் வரசன் முகம் கருகியது.

முடிவில் ஒரு வீரன் எழுந்து அக்கங் கணத்தை வணங்கி எடுத்து அணிந்து கொண்டான். அவன் யாரெனில் பிரதாப னது சேனைத் தலைவனே. கங்கணத்தை அவன் அணிந்து கொண்டு, அரசனையும் அவையோரையும் நோக்கி,

“இக்கங்கணம் அரசியிடமிருந்து வந் துளது; காரணம் இன்னதென விளங்க வில்லை. ஆண்மை படைத்த அரசன் இதனை ஏற்றுக்கொள்வான் என்று எண்ணி னேன். ஏனெனில் அரசியின் மனக் கருத்தை நிறைவேற்ற அரசனிலும் ஆண்மை யுடையார் உளரோ? அரசன்

மௌனம் சாதிக்கவே, ஏனைய வீரரேனும் கிளம்புவரெனக் கருதினேன். ஒருவரும் முன் வாராது போகவே, இச்சபைக்குப் பங்கம் வரும் என்று எண்ணி, இதனை ஏற்றுக் கொண்டுளேன். சபையோரின் ஆசியை முன்னிட்டு, எக்காரிய மாயினும் ஆண்டவனது அருளைக் கோரி அதனைச் சாதிக்கக் காத்திருக்கின்றேன்'' என்று கூறி அமர்ந்தனன்.

அரசனுக்கோ உடம்பனைத்தும் எரிய லாயிற்று. ஆயினும் வாய் திறந்து வார்த்தை எதுவும் விளம்ப வில்லை. பின்னர் அத் தாதியோ இனிய குரலில், "கங்கணத்தை ஏற்றுக் கொள்வோன் கடமை யாதெனில், வலந்தராயைக் குடும்பத்துடன் காக்க வேண்டும் என்பதாகும்'' என்றனள்.

சேனாபதி அது கேட்டு, "அன்னாய்! அங்ஙனமே செய்வேன். ஆண்டவன் மீது ஆணை,'' என்று பதில் தந்தான். அரசனோ மிக்க ஆத்திரங் கொண்டு, உடனே தர் பாரைக் கலைத்துத் தனி யறையில் புகுந்து சிந்திக்கலாயினன்.

"அடிக்கடி அரசி கூறிய புத்திமதியை நாம் கேட்க வில்லை. ஆதலின், அவளோ

நம்மை அவமானப் படுத்துவது போல் கங்கணம் அனுப்பி, சேனுபதியைக் கட்டுப் படுத்தி விட்டாள். எனவே, வஸந்தராயை நாம் கொல்லுதல் எங்ஙனம்? நமது எண் ணம் மண்ணுருமோ?'' என்று அவன் எண்ணி, அரசியை அழைத்து அதட்டி னன், உருட்டினன், இனிய மொழி கூறி னன், இரந்தும் கேட்டனன்.

அரசியோ பிரதாபனது பேதைமதிக்கு இடம் தரவில்லை. முடிவில், "கண்ணே, வஸந்தராய் மரிக்காது போயின், நமக்கு ஆபத்து நேரும்'' என்றனன் பிரதாபன். அதற்கு அவள், "அரசே, நமக்கு ஆபத்து நேரினும், வஸந்தராயைக் கொலைகாண யான் சம்மதியேன்'' என்று பதில் கொடுத் துவிட்டுச் சரேலெனச் சென்றுவிட்டனள்.

பின்னர் பிரதாபன் வஸந்தராயிடம் சென்று, "எந்தாய்! அறியாச் சிறுவன் பல பிழை புரிந்து விட்டேன். என்னை மன் னித்தல் வேண்டும்'' என்று காலில் விழுந்து கேட்டுக் கொண்டான். வஞ்சனை யறியாத வஸந்தன் "பிள்ளாய்! இனியேனும் நெறி யுடன் நடப்பாயாக'' என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தனுப்பினன்.

அப்பால் வஸந்தராயை விருந்துக்கு அழைத்தனன் பிரதாபன். வஸந்தனும் விருந்தாக வர இசைந்தான். ஆயினும் இராஜேசுவரி உடனே வஸந்தராயின் மகனைத் தன்னிடம் அழைத்துக் கொண்டனள். பின்பே வஸந்தராய்க்கு விருந்து கொடுக்க அவள் இசைந்தாள்.

வஸந்தராயும்தனதுமாளிகையைவிட்டு வருங்காலையில் தன் மனைவியை நோக்கி "அன்பே, நமது மாடப் புருவை உடன் கொண்டு செல்கின்றேன். இது தனியே திரும்பிவருமாயின், யான் இறந்துபட்டேன், அல்லது சிறையில் கிடக்கின்றேன் என்று எண்ணிக்கொள்," என்று கூறிவந்தனன்.

வஞ்சனை விளையுமோ என்று நால்வர் பெருவீரர் வஸந்தராயின் மெய்காப்பாளராக உடன் வந்தனர். வஸந்தராயைக் கண்டதும் பிரதாபன் பெரிதும் களித்து, மனமும் முகமும் மலர்ந்து வரவேற்று உபசாரம் பலவும் புரிந்தான். வஸந்தராயும் மெய்காவலரும் சற்றே கலக்கம் நீங்கினர்.

பின்னர் அனைவரும் விருந்துண்டு களித்துத் தத்தம் இருப்பிடம் ஏகினர். போகும் வழியிலே கொலைஞர் குறுகி, வஸந்த

ராயையும், மெய்காவலரையும் வாள்கொண்டு வெட்டி வீழ்த்தி விட்டனர். மாடப்புருவோ மனம் கலங்கி, வஸந்தராயின் மாளிகை வந்து சேர்ந்தது.

அது கண்டு ஆங்கிருந்த அனைவரும் இனித் தமக்கும் பேராபத்தும் அவமானமும் விளையும் என்றுன்னி, அரண்மனையில் இருந்த குளத்தில் குதித்து ஆவி நீத்தனர். வஸந்தராயின் மகன் மட்டும் தப்பினன். ஏனெனில், அவன் இராஜேசுவரியின் பாதுகாப்பில் அல்லவோ இருக்கின்றான்.

கொடும்பாவி பிரதாபன் எத்தனை நாள் அரியணையில் அமர்ந்திருக்க முடியும்? குலதெய்வமும் கோபங் கொள்ள முயன்று விட்டது. தருக்கித் திரியும் பிரதாபனை அடக்கிவரும் வண்ணம் அக்பர் சக்கரவர்த்தி மானசிம்மனை யனுப்பினன்.

இராஜா மான சிம்மனைப் போல் அக்காலத்தில் அதி சமர்த்தான சேனைத் தலைவர் கிடையாது. படைகொண்டு வந்தும் அத்தலைவன், "பிரதாப! போர் மூளின் இரு பக்கத்திலும் வீணே கொலை நிகழும், நாடு நலியும். ஆதலின், அறிவு தலைப்பட்டு அரசிறையைச் செலுத்தி அடங்கி வாழ்தலே

மேலாகும்,'' என்று நிருபம் விடுத்தான். பிரதாபனோ அக்கடிதத்தைக் கிழித்துக் காற்றிலே பறக்கவிட்டு, "வாள் முனையில் பேசுதலே சாலச் சிறந்தது'' என்று பதில் விடுத்தனன்.

உடனே பிரதாபனது சேனை திரண்டது. அதில் ஐம்பதாயிரம் வாள் வீரரும், முப்பதாயிரம் ஈட்டிப் படையாளரும், பத்தாயிரம் பரிவீரரும் இருந்தனர். தவிர, இரு நூறு யானைகளும் நூறு பீரங்கிகளும் இருந்தன. போர்த்துகேசிய வீரரும், பர்மிய வீரரும் துணையாக வந்தனர். இப்பெருஞ் சேனையுடன் பிரதாபன் சமர்முனை சென்று போர் தொடுத்தான்.

காலை முதல் மாலை வரையில் கடும்போர் நிகழ்ந்தது. மொகலாயப் படைகள் பிரதாபனது சேனையைக் கண்டு பின்வாங்கிச் சீர்குலைந்தன. மறுதினம் பிரதாபன் வெற்றி மாலை சூடுவதாயிருக்க, வங்கவீரரோ மூலைக்கு ஒருவராகஓட்டம் பிடிக்கத் தலைப்பட்டனர்.

யாதுகாரணமெனப் பிரதாபன் வினவுகையில், "இராஜேசுவரி போய்விட்டாள்'' என்றுபலரும்சொல்லினர். பிரதாபனுக்கோ ஒன்றும் விளங்கவில்லை. முடிவில் "நம் குல

தெய்வம் முகம் கோணி விட்டனள். நமது அரசி இராஜேசுவரி உயிருடன் இருக்கின்றனள்'' என்று பலரும் சொல்லினர்.

குலதெய்வம் முகம் கோணி விட்டதாக வதந்தி கிளம்பியவுடன் சேனை சின்ன பின்ன மாயிற்று. பிரதாபன் மனவலி கொண்டிருந்தும் யாது பயன்? சேனையைச் சீர் செய்ய அவனால் இயல வில்லை. அது சமயம்பார்த்து, மொகலாயவீரர் பிரதாபனைச் சிறை செய்து விட்டனர்.

பின்னர் இராஜா மானசிம்மன் ஜேஸ்லமீர் நகரை நோக்கிச் சென்றான். அந் நகரோ தக்க பாதுகாப்பில் இருப்பதுகண்டு, அவனுக்குப் பிரமை உண்டாகி விட்டது. இராணிஇராஜேசுவரி எஞ்சியுள்ளபடைகளை அணிவகுத்து, சேனைத் தலைமைபூண்டு, தலை நகரைக் காத்து நிற்கலானாள். நாட்டின் சுதந்தரத்தைப் பாதுகாக்க உயிரைவிடவும் வேண்டும் என்பதே அவளது துணிபு.

மான சிம்மன் ஒரு தூதனை யனுப்பி, "நங்காய், உனது வீரத்தையும் வலியையும் கண்டு வாழ்த்துகின்றேன். என்னிடம் பெருஞ் சேனையுளது. உன்னிட முள்ள வீரரோ கொஞ்சம். எனவே நான் இலகுவில்

வெற்றி கொள்ள இயலும். என்றாலும், உன் பக்கம் உள்ள அனைவரும் உயிர் துறக்க நேரும். நீயும் ஆவியிழப்பாய். அத்தகைய வீரரை வெட்டி வீழ்த்த எனக்கு மனமில்லை. ஆதலின் பணிதலே மேல்'' என்றனன்.

இராஜேசுவரி அது கேட்டு, "வீர, நாட்டைக் கொள்ளையாடவோ, நாரியரைக் கைபிடிக்கவோ இல்லை என உண்மை இராஜ புத்திரனைப்போல் உறுதி கூறின், பணியத் தடையில்லை. இல்லையேல் ஓர் ஆள் உயிருடன் இருக்கும் வரையில் நகரம் பணியாது. இது திண்ணமே'' என்றனள்.

பெருந்தன்மை வாய்த்த இராஜா மான சிம்மன் அதற்குச் சம்மதித்தனன். பின்னரே தலைநகரின் கோட்டைக் கதவுகள் திறக்கப் பட்டன. அப்பால் பதிக்கு நேர்ந்த கதியைத் தானும் அனுபவிக்க எண்ணி, பிரதாப னுடன் தானும் சிறைப்பட்டு டில்லி சென்ற னள். ஆனால் அவ்விருவரையும் ஒரு பெரிய இரும்புக் கூண்டிலே எடுத்துச் சென்றதால், பிரதாபன் காசி அருகே ஆவி துறந்தான்.

உடனே அவன் மனைவி இராஜேசுவரி தன் கணவனது உடலைத் தாங்கி அக்கினியில்

குளித்து அமரர் உலகம் போயினள். அக்பரும் மானசிம்மனும் அதுகேட்டு வியந்து, அன்னருக்கு உரிய கிரியைகள் உரிமையுடன் நடத்துமாறு கட்டளையிட்டனர்.

8. ஸ்ரீ பவானி ராணி

நிலமகளின் முகமெனத் திகழும் நமது தேசத்தின் வடபாகத்தில் ஓர் ஐந்நூறு வருஷகாலம் முகம்மதியர் ஆட்சிபுரிந்தனர். அக் காலமெல்லாம் வங்க தேசமோ சுதேச ராஜாக்களுக்கே உட்பட்டிருந்தது.

உள் நாட்டு அரசியலில் முகம்மதிய மன்னவர் தலையிடுவதில்லை. ஆண்டு தோறும் இறைப் பணத்தை வசூலிப்பதில் மட்டும் அன்னார் கண்ணுங் கருத்துமாக இருப்பர். மொகலாயவரசின் கடைநாளிலே அலிவர்டிகான் என்பான் வங்கத்தைத் தன்னரசாக வைத்துக் கொண்டனன்.

அவனுக்குப்பின் பட்டமேறிய ஸ்ரீராஜதௌலன் என்பான் அரசில் சிந்தைசெலுத்தவில்லை; களியாட்டத்திலும் கேளிக்கைகளிலுமே அவன் காலங்கழித்து வரலாயினன். ஸ்ரீராஜனது காலத்தில் வங்கத்திலே சிறப்புற்று விளங்கிய சுதேசமன்னர் நால்வராவர்.

அன்னார், கிருஷ்ணகிரியின் காவலனான இராஜா கிருஷ்ண சந்திரன்; டாக்காவைப்

பரிபாலித்த இராஜா இராஜ வல்லபன்; பாடலிபுத்திரத்தின் பார்த்திபனான இராஜா துர்லபன், நாட்டூரில் நல்லரசாண்ட இராணி பவானி ஆகிய நால்வருமே யாம்.

அப்போது ஜகத்சேட் என்னும் குடும்பத்தைச் சேர்ந்த தனிகன் மாகாராஜா திவான் சந்தும், சேனாதிபதி மீர் ஜாபரும் செல்வாக்குப் பெற்றவர்கள். அந்த அறுவரும் சேர்ந்து வங்கத்தை இஷ்டம்போல் ஆட்டிவைக்கும் ஆற்றல் கொண்டிருந்தனர்.

நாட்டூர் அரசே எல்லாவற்றினும் பெரியது; வளமும் வலியும் படைத்தது. ஆண்டு தோறும் அது செலுத்தி வந்த இறைத் தொகை ஒன்றரைக் கோடி ரூபாய்! காலாளரும் குதிரை வீரருமாக ஐம்பதாயிரவர் நாட்டூர் சேனையில் சேவித்திருந்தனர்.

இராணி பவானியின் புருஷனான இராஜா இராம காந்தன் என்பான் அதி பால்யத்திலே அரசாளும் உரிமை பெற்றனன். இளங்கன்று பயம் அறியாதுஎன்பர்.

அங்ஙனமே இராம காந்தன் மேல் விளைவை யோசியாமல் கூத்திலும், களிப்பிலும் பொழுது போக்கி வந்தனன்.

குபேர சம்பத்து வைத்திருப் போரும் துன்மார்க்கத்தில் இறங்கின், உடைமை யனைத்தும் இழப்பர் அன்றோ? அது கண்டு அமைச்சன் தயாராம் தனது அறிவாற்றல் கொண்டு, இராம காந்தனை நன்னெறியில் செலுத்தப் பார்த்தான். அதன் பயனாகத் தயாராமுக்கு வேலை போயிற்று. பின்னர் அன்புள்ள மனைவியான பவானியே பல வகையிலும் பல சமயங்களிலும் அப் பார்த் திபனைத் திருத்த முயன்றனள்.

கெடுமதி கொண்ட இராம காந்தன் தனது தீய ஒழுக்கத்தை இம்மியும் விட வில்லை. முடிவிலே பொக்கிஷத்தில் பணம் வறண்டுவிட்டது; சேனைக்கும் சேவகருக்கும் கொடுக்கப் பண மில்லை. இந் நிலையில் அரசிறை செலுத்தல் எங்ஙனம்? அலிவர்டி கானே ஆத்திரங் கொண்டு அவ் வரசைப் பறித்துக் கொண்டான்.

உடனே இராம காந்தன் வேறு வகை யின்றி ஜகத் சேட்டினிடம் சரண் புகுந்து வயிறு வளர்த்து வந்தனன். பவானி ராணிக்கோ மனம் பொறுக்க வில்லை.

அம் மாதராள் மதி வன்மை கொண்டு, தயாராமை வரவழைத்து, அவன் உதவியால்

நவாபின் அமைச்சரை வசஞ்செய்து, நாட்டை மீட்டுத் தந்தனள் தன் கணவனுக்கு. குடி மக்கள் அது கண்டு அளவிலாத ஆனந்தங்கொண்டனர்.

ஆயினும் இராணி பவானியோ துர்ப்பாக்கியவதி ஆயினள். அவளது அருமந்த மைந்தர் இருவர் ஆவி துறந்தனர். கணவனும் காலகதியானன். அத் தருணம் அம்மாதுக்கு வயது முப்பத்திரண்டு. மன வலியும் பேரரசுமே அவளுக்கு எஞ்சியிருந்தன.

வங்கத்திலே ராஜரீகப் புரட்சி நேர்ந்த காலத்தில், அவள் தைரிய இலட்சுமியின் உதவி கொண்டு அரசியலை மேற்கொண்டாள். அறிவும், ஆற்றலும், அரசியல் திறனும் அவளுக்கு ஏவல் செய்து நின்றன.

ஆதலின் அவள் பெண்ணரசு தானே என எவரும் இலேசாகப் பேசாவண்ணம் ஆட்சி முறையை நன்கு நடத்தி வந்தாள். ஸ்ரீராஜதௌலனது தீய ஒழுக்கமும், வங்கத்தின் சீர் கேடான நிலையும் அவளுக்கு முன்னரே நன்கு தெரியுமன்றோ?

ஆதலின் அவள் முதலாவதாகத்தனது படையைப் பெருக்கி வலியைத் தேடிக்கொண்டாள். அரசியலை அற இயலாக்கி,

நாட்டுமக்களின் பயபக்தி விசுவாசத்துக்குப் பாத்திர மானுள் பவானி ராணி.

தனது கூடா வொழுக்கத்தினுக்கு அபரிமிதமான பணம் வேண்டி யிருக்கை யில், ஸ்ரீராஜன் தனது சிற்றரசை வருத்திப் பணம் வாங்குவது வழக்கம். ஆயினும், இராணிபவானியை அங்ஙனம்வருத்த அவ னுக்குத் தைரியம் பிறக்க வில்லை. ஏனைச் சிற்றரசை அவன் அந்த வகையில் கசக்கிப் பிழிந்தது கொஞ்ச மன்று.

கணவனிழந்து துறவியைப் போல் காலங் கழித்து வந்த தாரையின் பேரழகை ஸ்ரீ ராஜன் உணரலாயினன். உடனே அவன் பவானி ராணிக்குத் தூது விடுத்து, அம் மகளை மணக்க விரும்பினுன். வந்த தூதுவனை வாட்ட மனமில்லாத பவானி நற்புத்தி சொல்லி யனுப்பினள். ஆசையில் மூழ்கிக் கிடந்த ஸ்ரீ ராஜன் உடனே படை கொண்டு கிளம்பினுன்.

பவானிராணியும் தனதுபெருஞ்சேனை யுடன் சிங்கநாதஞ் செய்து புறப்படத்தயங்க வில்லை. இருபக்கத்துப் படைகளும் மூர்ஷி தாபாத் நகருக்கு அப்பால் சந்தித்தன. பவானி படைத்தலைமை பூண்டு, பாங்காகப்

போர் புரிந்தாள். இராணியின் துணிவைக் கண்ட வங்க வீரர் தங்கள் முழு பலமும் கொண்டு சமர் முறுக்கினர்.

முடிவில் ஸ்ரீ ராஜனது சேனே தோற்றேடியது. இராணி பவானி அதனைத் தலைநகரம்வரையில் துரத்திச்சென்று, அச்சமும் திகிலும் ஊட்டினள். பவானியைச் சிறை செய்து நாட்டுரின்பொக்கிஷத்தைக்கொள்ளையிட வந்த சேனே முறிபட்டுச் சென்றதைக் கேட்டதும், ஸ்ரீராஜன் திகில் கொண்டான்.

ஸ்ரீ ராஜனது அக்கிரமங்கள் பெருகி வரவே, வங்கத்தின் பல சிற்றரசரும் ஒருங்கு கூடி, அவனை அரியணையிலிருந்து அகற்ற முயன்றனர். உடனே மேற் சொன்ன அறுவரும் சேர்ந்து ஆலோசிக்கத் தொடங்கினர்.

ஜகத் சேட், "ஸ்ரீ ராஜனை அகற்றி விட்டு, மீர்ஜாபரை அரியணையில் அமர்த்தல் நலமாகும். அவனே சேனைபதியாக இருக்கின்றான். அன்றியும் நேர்மையாக அரசாளவும் வாக்குறுதி தந்துளான். அதிக இரத்தப் பெருக்கின்றிக் காரியம் நடக்கும்," என்று கண்டிப்பாகச் சொல்லினன்.

இராணி பவானி அது கேட்டு, "அரசர்காள், பெண்ணொருத்தி இப் பெருஞ்

சபையில் பேசத் துணிகின்றனள். வங்கத்தின் வேந்தனாக ஒரு ஹிந்துவை அமர்த்தல் ஆகாதோ? சென்ற எழுநூறு ஆண்டுகளாக முகம்மதியரின் ஆட்சிக்கு உட்பட்டு உழன்றதும் போதாதோ?” என்றாள்.

இராஜாகிருஷ்ணசந்திரன், “அரசியே, அது நல்ல யோசனை தான். சுமார் ஆயிரம் ஆண்களுக்கு மேலாக அன்னியருக்கு அடங்கி வாழ்தல் அவமானமே. ஆயினும் வேற்றரசர் படைகொண்டு வரின், அதனை எதிர்த்துநிற்க நம்மிடம் இலட்சக்கணக்கில் வீரர் உளரோ? மேலும் நாமே ஒற்றுமையின்றி அசூயை கொண்டு கிடக்கின்றோம். என் செய்வது?” என்றனன்.

பவானி, “ஆம்; உங்கள் வாதத்தில் அர்த்தம் உளது. மீர் ஜாபரும் ஸ்ரீ ராஜனைப் போல் ஆயின், என்செய்வது?” என்று வியன் சபையை நோக்கி வினவினள்.

இராஜ வல்லபன், “அரசியே! அதனையும் எண்ணிப் பார்த்தோம். மீர் ஜாபரை அடக்கி வைத்திருக்க, ஆங்கிலேயரின் உதவியை நாடியிருக்கின்றோம். ஆங்கிலேயர் மகாவலிமைகொண்டபுருஷர். அவர்கள் வியாபாரிகளே; அன்னருக்கு

மண்ணாசை இல்லை. வியாபார விஷயமாய்ச் சில சௌகரியங்கள் செய்து கொடுப்பின். நமக்கு ஆங்கிலேயர் உதவி புரிவர். அப்போது மீர் ஜாபரை நாம் ஆட்டிவைக்க இயலும்,'' என்று கூறினான்.

ஜகத் சேட், "ஆம் ஆம்! ஸ்ரீ ராஜனுக்கும் ஆங்கிலேயருக்கும் பகை மூண்டுளது. விரைவில் அவன் அரசை இழக்க நேரும். ஆதலின் மீர் ஜாபரோ ஆங்கிலேயரின் நட்பைத் தேடிக்கொள்ளவே நாட்டங்கொண்டு கிடப்பன். இந்நிகழ்ச்சிகளைக் கொண்டு நாம் அஞ்சவேண்டியதில்லை'' என்றனன்.

இராணி பவானி கூறுவாள்:- "அரசர்காள்! சிக்கலான அரசியல் விஷயத்தில் பேதைப் பெண் பெருமதிபேசுதல் விசித்திரமாகக் காணப்படும். மீர் ஜாபரை அடக்கிவைக்க ஆங்கிலேயரின் உதவியை நாடலாம் என்கிறீர்கள். இருவரும் சேர்ந்துகொண்டு தேசத்தைச் சுரண்டப் பார்ப்பின், என்ன செய்வது? நன்றாய் எண்ணிப் பாருங்கள்.

"தவிர ஆங்கிலேயரை வெறும் வர்த்தகர் என நான் எண்ணவில்லை. வியாபாரம் செய்ய வந்தவர்கள் ஒரு நூற்றாண்டுக்குள் எங்கும் பண்ட சாலைகளும், கோட்டைகொத்

தளங்களும், படைவகுப்புக்களும், சண்டைக் கப்பல்களும் கொண்டுசூலவுவதை எண்ணிப் பாருங்கள். நாளடைவில் அன்னார் அரசில் ஆசை கொண்டு எங்கும் கைமேலாகி விடுவர் என்றே எனது திருஷ்டிக்குத் தோன்று கின்றது. இன்னுங் கேளுங்கள்.

"நம்மில் ஒற்றுமை இல்லை என்பது மெய்யாக இருக்கலாம். எப்போது நாம் ஒற்றுமை கொள்வது? எக்காலம் நாம் சுய வரசு காண்பது? தலைவலி போகத் தெறு வலியை விலைக்கு வாங்குவதா? இன்னுமா அன்னியரை நம்பிக்கிடக்கவேண்டும்? நமது தேசம் செய்த பாக்கியந்தான் என்னே! பிறருக்கு அடிமையாக வாழவே ஆண்மக்க ளாகிய நீங்கள் ஆசை கொள்ளுகின்றீர்கள்.

'நமது குடும்பத்தில் ஒற்றுமை இல்லை, பொறுமை உளது' என்று சொல்லி, நமது குடும்பத்தை அயலானிடம் ஒப்படைக்கநாம் மனம் ஒப்புவமா? ஆகாரம், வியவகாரம் இரண்டிலும் கண்ணோட்டம் கூடாது என்று கருதியே கண்டிப்பாகப் பேசுகின் றேன். ஆதலின் வேண்டாம், உங்கள் யோசனை அனைத்தையும் கட்டிவையுங்கள்.

"வங்க வாசிகளான நாம் வங்கத்தை மட்டுமாவது சுயவரசாக்கிக் கொண்டு வாழலாம். சிற்றரசராகிய நாம் ஒரு ஜாதி. ஒரு மதம்; சண்டையும் பூசலும் நமக்குள் இருக்கட்டும். அன்னியர் வேண்டாம்; அன்னியரை நாம் நம்பவும் வேண்டாம்."

இங்ஙனம் பேச்சு நடந்து கொண்டேயிருந்தது; ஆடவரான அரசருக்கோ ஆண்மை பிறக்கவில்லை. மீர் ஜாபரையே அரசனாக்கி, ஆங்கிலேயரின் உதவியை நாடலாம் என்று முடிவில் எல்லோரும் தீர்மானித்தனர். இத்தீர்மானமேமுடிவாயிற்று.

இராணி பவானி, "ஏழை சொல் அம்பலம் ஏறவில்லை. என்ன செய்யலாம்" என்று கூறி விதியின்றி இணங்கினள்.

ஆயினும், இணங்கும்போது, "அரசர்காள், சோதிடம் போல் செப்புகின்றேன். ஆங்கிலேயரின் உதவியை நாடப் போகின்றீர்கள். கண்டிப்பாக அவர்களே நாளடைவில் இப்பூமியில் ஆதிக்கம் செலுத்தப் போகின்றனர். நான் இறந்து படுவேன். ஆயினும் என் சொல்லின் பயனை நீங்களேனும், உங்கள் புத்திர பௌத்திர

ரேனும் கண் கூடாகக் காணலாம்,'' என்று எச்சரிக்கை செய்தாள் பவானி ராணி.

பின்னர் ஆங்கிலேயருக்கும் ஸ்ரீ ராஜனுக்கும் யுத்தம் நடந்தது. மீர் ஜாபர் ஆங்கிலேயருக்கு உதவியாக இருந்தான். ஏனைய சிற்றரசரோ வேடிக்கை பார்த்து நின்றனர். ஸ்ரீ ராஜனோ முடிவில் தோற்று, அப்பால் கொலையு முண்டு, தொலைந்தனன்.

உடனே மீர் ஜாபர் பட்டத்துக்கு வந்தான். இவனும் கொஞ்ச நாளே அரசனாக இருந்தனன். இவனுக்குப் பின் மீர் காஸிமை ஆங்கிலேயர் அமர்த்தியும், முடிவிலே வங்கத்தின் ஆதிபத்தியம் அவர்களின் கையில் சிக்கிவிட்டது.

பவானியின் பேச்சுப் பலித்தது. பிளாஸி நகரில் போர் நடக்கையில், "முடிவு யாதாமோ, தன் நாட்டுக்குப் பங்கம் நேருமோ'' என்றுராணிபவானி எண்ணித்தனது அரிய படை வகுப்புக்களைப் போர்க்கோலத்துடன் திட்டமாக வைத்திருந்தனள்.

பின்னர் இராணி தனது அரசியலை இன்னும் செம்மைப் படுத்தி, இராஜா இராம கிருஷ்ணன் என்பானைப் பிள்ளையாகக் கொண்டு, அவனை அரியணையில் ஏற்றி

வைத்து, சின்னாள் உடனிருந்து உதவி புரிந்தனள். பின், போகும் வழிக்கு நல்வழி தேடக் கருதி, காசிமா நகரம் சேர்ந்து, அங்கே பர்ணசாலை யொன்று கட்டிக் கொண்டு பரமனை நினைத்து, பக்தி சிந்தனையுடன் காலங்கழித்து வந்தனள்.

அதற்கு முன்னம் நாடெங்கும் அறச் சாலைகளும், சோலைகளும், பூங்காவனங்களும் அந்த அம்மை நிரப்பி வைத்தாள்; ஏழை எளியவருக்குப் படிப்புக்கான வசதி தேடி வைத்தாள்; வடமொழிக் கல்லூரி யொன்று நிலைநாட்டிப் பலரைப்பயிற்சிசெய்வித்தாள்; ஆங்காங்கே ஆலயங்கள் அமைத்து மான்யங்கள் விட்டாள்; நீர் நிலையில்லா இடங்களிலே குளமும் கிணறும் வெட்டி நீர் வளம் பெருகுமாறு நியமித்து வைத்தாள்.

ஆண்டு தோறும் தர்மத்திலே அவள் சுமார் ஒருகோடி ரூபாய் செலவிடுவது வழக்கம். தனது 79-ம் வயதில் 1807-ம் ஆண்டில் அவள் பரலோகம் போயினள்.

அவளது சுவீகார புத்திரன் இராமகிருஷ்ணன் இல்வாழ்வில் இச்சைகொள்ளாமல், துறவறத்தில் நாட்டங் கொண்டு, தனது செல்வ மனைத்தையும் பட்டினத்துப் பிள்ளை

யைப் போல் பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்தான். எஞ்சிய கொஞ்சமே ராணி பவானியின் குடும்பத்தாருக்கு இன்றும் சொந்தமாயிருந்து பெயர் கூறி வருகிறது.

பவானியின் வம்சத்தினர் இன்று ஒரு சிறிய ஜமீந்தாராக இருக்கின்றனர். தென்னாட்டிலே இராணி மங்கம்மாளின் கீர்த்தி பொங்கிப் பரந்திருப்பது போல், வடதேசத்திலே பவானியின் புகழும் பெருமையும் எங்கும் பரந்துள்ளன. அவ்வமிசத்தைச் சேர்ந்த ஜமீந்தாருக்கு ஆங்கில அரசாட்சியிலே மகாராஜா பகதூர் என்ற பட்டம் வழங்கப்பட்டுளது. அன்னார் பெருங்காயமிருந்த செப்புப்போல் இன்றும் விளங்குகின்றனர்.

9. ஜோதிபுரி மாதரசி சந்திரவதி தேவி

பாலும்தேனும் வழிந்தோடிய பெருமை பாரத பூமிக்கே உண்டு. அப் பாரத பூமியிலே இராஜபுதனம் என்பது ஒரு தேசம். அத் தேசத்தின் பல நாடுகளில் ஒன்று மாருவாரம் எனப்படும். ஆயிர வருஷ காலமாக ஓர் இராஜ பரம்பரையினர் அந்நாட்டை ஆண்டு வருகின்றனர்.

இராஜபுதனத்தில்உள்ள மக்கள் அனே வரும் இராஜபுத்திரர் எனப்படுவர். அவர் களிலே பல பிரவுகள் உண்டு. மாரு வாரத் தில் உள்ளோர் இரகதர் என்னும் பிரிவினர் ஆவர். பதினேழாம் நூற்ருண்டின் மத்தி யிலே மகா ராஜா **யசோவந்தன்** என்பான் அம் மாருவார நாட்டின் மன்னவனுக விளங்கி மகாவரசாண்டனன்.

அச் சமயம் டில்லிமா நகரிலிருந்து பேரரசு செலுத்தியவன் பெயர் ஷாஜ ஹான். இவன் இராஜ புத்திர மங்கையி னிடமாக ஜிஹாங்கீர் என்பானுக்குப் பிறந்

தவன்; இராஜபுத்திரரின் பேருதவியால் அரசைப் பெருக்கினவனும் ஆவான்; ஆத லின் இராஜபுத்திர வேந்தரிலே பலரும் இவனுக்கு உற்ற தோழரும் உயிர்த் துணை வருமாக விளங்கினர். அங்ஙனம் விளங்கிய வர்களில் மகாராஜா யசோவந்தனை முன் வைத்து எண்ணவேண்டும்.

ஷாஜஹானது மைந்தர் நால்வரில் கடையவன் அவுரங்கசீப். அப்பன் உயிருடன் இருக்கும் போதே, அரசாளும் ஆசை அவு ரங்சீப்பை அடிமை கொண்டு விட்டது. ஆதலின், அவன் தன் சோதரர் மூவரையும் வஞ்சித்து, அரியதந்தையையும் சிறைசெய்ய ஒரு பெரும் படையுடன் கிளம்பினன். ஷாஜஹான் அது கேட்டு மாருவார மன்ன வனது உதவியை நாடலானான்.

அங்ஙனமே யசோவந்தன் முப்பதாயிரம் வீரருடன் கிளம்பினன். அவுரங்கசீப்பைப் புறங்காண முகம்மதிய சேனை யொன்றும் யசோவந்தனுக்குத் துணைபுரியச் சென்றது. நருமதை நதிக் கரையில் இரு பக்கத்தின் படைகளும் சந்தித்தன. பொழுது புலர்ந்த தும், பகைவன் மீது பாயக் கருதி மாருவார வேந்தன் தனதுபடைகளை அணியணியாய் வகுத்து அழகுபெற நிறுத்தினன்.

இரவிலே முகம்மதிய சேனை அவுரங்க சீப்பின் பக்கம் போய்விட்டது. அத்துரோகச் செயல் கண்டும் யசோவந்தன் மனந்தளரவில்லை; அவ் வீர வேந்தன் தனது படை வீரர் முப்பதினாயிரவருடன், அவுரங்கசீப்பின் சேனையை அதிகாலையில் எதிர்த்தனன். அதிக சமர்த்தாகப் பகல் முழுதும் வெற்றி தோல்வி இல்லாமல் கோரயுத்தம் நடந்தது.

இராஜபுத்திரர் தம் மரபுக்குரிய வீரங் காட்டிக் கடும்போர் விளைத்தனர். ஆயினும் நான்கு மடங்கு வலி நிரம்பிய அவுரங்கசீப்பின் சேனையை இராஜபுத்திரர் முறியடிக்க முடியவில்லை. தனது வீரரில் பதினாயிரவர் வீர சுவர்க்கம் புகுந்தது கண்ட யசோவந்தன் போர் நூலின் முறைக்கிணங்கப்பின் வாங்கினன். பக்க பலம் பெற்று மீண்டும் போர் புரியக் கிளம்ப வேண்டும் என்பதே அவ்வேந்தர் திலகத்தின் கருத்தாகும்.

மகாராஜா யசோவந்தனது பட்ட மகிஷி இராஜபுதனத்தின் சிறந்த நாடாகிய மத்தியபதி மன்னவன் மகளாவாள். ஏனைய இராஜபுத்திர வேந்தர் மண்ணையும் பெண்ணையும் கொடுத்து முகம்மதிய மன்னவரின் நட்பை விரும்பி நின்றும், மத்தியபதி

மகிபரே தம் மரபுக்குரிய மானத்தைக் கை விடாத பேராண்மையாளர்.

அத்தகைய குல மங்கை தன் நாயகன் பின்வாங்கி வருகின்ருன் என்று கேள்வி யுற்றதும், கொண்ட துயரம் கூறுந்தரமன்று. அக்காலம் இந்தியாவிலிருந்து அப்போர் விவரத்தை நன்குணர்ந்தவர் பேர்னியர் எனனும் ஒரு பிரஞ்சுக்காரரர்.

அவர் சொல்லும் வண்ணம், வேட னம்பு பட்ட மான் போல் சந்திரவதி துடித்து, "என் தோழியரே! பகைவனுக் குப் புறங்காட்டி வரும் பார்த்திபனை நமது அரண்மனைக்குள் நுழைய விடுதல் ஒண் ணுது. ஆதலின், மதிள் கதவை உடனே அடைத்துத் தாளிடுங்கள்," என்று கட்டளை யிட்டனள் கடுங்கோபத்துடன்.

பின்னர், "சகிகாள்! அன்னியனை முதுகு காணுது மீண்டு வருவோன் ஆண் பிள்ளை ஆவனே? அவன் என் கணவன் அல்லன். மத்தியபதி மங்கைக்கு மாலை யிட்ட வீரனுயின், ஒன்று வெற்றி மாலை யுடன் திரும்பல் வேண்டும்; இன்றேல் வீர சுவர்க்கம் புகுதல் வேண்டும்" என்று அவ் வரசி தன் அரசனைக் கூறிப் பதைத்தனள்;

அப்பால், "தாதியரே! என் தாமதம்? காஷ்டத்தை அடுக்குங்கள்; மாற்றானுக்கு முதுகுகாட்டி வரும் மணாளனது முகத்தில் விழிக்க எனக்கு இம்மியும் மன மில்லை. யான் மாண்டு மடிதலே மேலாகும்" என்று அவ்வீரபத்தினி சீறி விழுந்தனள்.

அதற்கு அப்பால் உன்மத்தம் கொண்டவள் போல் ஒன்று முரையாது, உயிர் உண்டோ இல்லையோ என்னும் வண்ணம் மஞ்சத்திலே அசைவற்றுக் கிடந்தனள் அச் சந்திரவதி. இங்ஙனம் அப்பெண்பால் எழு நாள் காறும் தன் கணவனைக் காண மன மின்றி, ஆகார நித்திரையில்லாது அயர்ந்து வாடி வதங்கிக் கிடந்தனள்.

முடிவில் மத்தியபதிக்குத் தூது அனுப்பவே, ஆங்கிருந்து அன்னை வந்து, "என் கண்ணே! ஏன் கலங்கி வாடுகின்றனை? உன் கணவன் உயர் வீரன்; என் மருமகன் மகா சூரன்; அன்னான் போரில் புறங் கொடுத்தான் அல்லன்; பகைப் படையின் பெருக்கைக்கண்டு, ஏற்ற பக்க பலம் பெற்றுப் போகவே திரும்பி யுள்ளான்; அன்றியும், அவனது உடலிலுள்ள படு காயங்கள் சிறி தேனும் ஆற வேண்டும் அன்றோ? நாள்

சில சென்றதும், எனது செல்வமருமகன்சமர் முனை சென்று, வாள்வலியும் தோள் வலியும் காட்டுவான்; இதனை நீயே கேட்டுக் களிக்கப் போகின்றாய். 'கொக்கு ஒக்க கூம்பும் பருவத்து, மற்று அதன் குத்து ஒக்க சீர்த்த இடத்து' என்பது ஆன்றோர் வாக்கன்றோ? அதனைக் கடைப் பிடித்து வந்திருக்கும் வேந்தனை, உன் காந்தனை, அணைத்து ஆதரிப்பது உன் கடமையாகும்'' என்று பல வகையில் ஆறுதல் சொல்லித் தேற்றினள்.

பின்னரே சத்திரவதியின் துயரும் சோகமும் ஒருவாறு தணியத் தலைப்பட்டன. நாளடைவில் அந்நங்கை தன் நாயகனைக் கண்டு வணங்கி, அவன் காயங்களை ஆற்றி அவனிடத்து அன்பு காட்டினாள்.

இதற்கு இடையில் அவுரங்கசீப் தனது சோதரரை மாய்த்து, அருமந்த தந்தையையும் சிறை செய்து, சிம்மாசனத்தில் ஏறி விட்டான். அரியணையில் அமர்ந்ததும், யசோவந்தனை எங்ஙனமேனும் ஆவிவாங்கி விடவேண்டுமென அவன் செய்தசூழ்ச்சிகள் பல வாகும். போர் முனையில் அவ்வீர வேந்தனது உயிரைக் கவரலாமென்றாலோ, அது மாத்திரம் ஆகாத காரிய மாயிற்று.

எனவே பகையாளி குடியை உறவாடிக் கெடுப்பதே சாலச் சிறந்ததென அவுரங்கசீப் துணிவு கொண்டனன்; அங்ஙனமே யசோவந்தனது நட்பை நாடி, அவனைச் சேனைத் தலைவனுக்கி, ஆப்கானியர் வாழும் காந்தார நாட்டினுக்கு அனுப்பினன். மொகலாய வரசுக்கு அடங்காமல் தருக்கிவாழும் ஆப்கானியரை எங்ஙனம் அடக்கி ஆண்மை காட்டுவதென அம் மாருவார மன்னவன் சிறிதும் தயங்கவில்லை.

வஞ்சனை என்பதை இராஜபுத்திரர் அறியார்; ஆதலின், யசோவந்தன் தாமதமின்றி அக்காந்தார நாடு போயினன்.

அப்போது சந்திரவதியும் உடன் வர ஆயத்தமானுள். "நங்காய்! காந்தாரம் மலைப் பிரதேசம், முரட்டு ஜாதியினர் வசிக்கும் பூமி; அல்லும் பகலும் அன்னுரை அடக்குவதிலேயே யான் காலங் கழிக்க நேரும். ஆங்கு நீ வரின், உனக்கு இன்பமும் சுகமும் இரா. ஆபத்தும் துன்பமுமே அதிகமாக இருக்கும். ஆதலினல் மூத்த மைந்தன் பிரிதிவிசிம்மனுக்குத் துணையாக நமது தலை நகராம் ஜோதிபுரியில் இருந்து, அரசை நடத்துவாயாக," என்று அவ்வீர புருஷன் இதமுற உரைத்தனன்.

சந்திரவதி, "அரசே! அத்தகைய நாட்டினுக்கு நான் வருதல் மிகவும் அவசியமே. அடியாள் தங்கள் அங்கத்தில் பாதியன்றோ? தங்களுடைய சுக துக்கங்களில் எனக்குச்சரி பங்கு இல்லையோ? அங்கே தாங்கள் நடத்தும் போர் வகையில் உடனிருந்து உதவி புரிய எனது உள்ளம் குவிந்துளது," என்று கூறிக் கணவனுடன் பயண மாயினள்.

சந்திரவதி தனது அந்தப் புரத்திலிருந்து வெளிக்கிளம்பியதும், தாதியரும், பிறரும் அவளை அடையாளங் காண முடியவில்லை. ஆண் உடை தரித்துப் போர்க் கோலமும் பூண்டிருப்பின், அடையாளங் காணுதல் அசாத்தியம் அல்லவா?

காந்தனுடன் காந்தாரம் சென்றதும், அவள் பாராத போர் முனை இல்லை; புரியாத சமரும் இல்லை; யசோவந்தனது மெய்க் காவலனைப் போல் உடனிருந்து அல்லும் பகலும் அவள் ஊழியம் புரிந்தனள்.

பகைவரின் பாசறையைக் காணின், அவள் மனம் பதறாள்; அன்றரின் ஈட்டிக் குத்து கடுகி வரின், இம்மியும் கலங்காள்; வாள் வீச்சு வேகமாய் வந்து வீழினும் சட்டை செய்யாள். மலைச் சரிவிலும் பள்

ளத்தாக்கிலும் பரிமீது செல்ல ஆடவர் அஞ்சினும், அவளுக்கு அச்சம் என்பது உதிக்காது. நாளொன்றுக்கு இருபது மைல் முப்பது மைல் பாய்மாவின்மீது படையுடன் செல்வதை ஒரு பாக்கிய மெனவே அவள் என்றென்றும் கருதியிருந்தனள்.

அங்ஙனம் அவ்வீரமாது ஆண்மை காட்டியதைக் கண்டு வியக்காதார் இல்லை. போரின் மிடுக்கும், நாட்டின் நலக்குறைவும் கண்டு நலிவடைந்த இராஜபுத்திரர் அம் மாதரசியின் புன் முறுவலால் பூரிப்புக் கொள்வர். சில ஆண்டுகள் வரையில் போரைத் தவிர வேறெதையும் அத்தம்பதி கள் கண்டனுபவிக்க வில்லை.

மாருவார மன்னவனது பெருவலியால் காந்தார நாடு கைவசம் ஆனமை கேட்டு மொகலாய மன்னவன் மிகவும் மகிழ்ந்தனன். ஆயினும் உடனே அடங்காக் கவலையும் அவுரங்கசீப்பினைப் பிடித்துக் கொண்டது. சந்திரவதியின் இணையிலா வீரமே அக் கவலைக்குக் காரணமாகும்.

அத்தகைய தம்பதிகளின் வமிசத்தை வேரறுத்தாலன்றி விழுமிய வல்லரசு நிலை கொள்ளாதென அவ் வேந்தர் வேந்தன்

உணர்ந்து கொண்டனன். சதி செய்து யாரையும் உயிர்வாங்குதல் சுலபம் அல்லவா?

ஜோதிபுரியில் இளவரசா யிருந்த பிருதிவி சிம்மனை அம் மொகலாயன் ஆசை காட்டி ஆக்ரா நகருக்கு வரவழைத்து, நஞ் சூட்டி நமனுலகு அனுப்பி விட்டான். பின் னர் சதிகாரரை நிருமித்து,யசோவந்தனையும் வஞ்சனையாகக் கொலை புரிவித்தான் அந்த அதியாசை கொண்ட அவுரங்கசீப்.

நாயகன் மரிப்பின், அந்நாளிலே நாயகி உயிருடன் வாழ விரும்பாள்.உடனே உடன் கட்டை ஏறி விடுவாள் என்பதே அவுரங்க சீப்பின் கருத்து. பதிபரலோகம் போயினன் என்று கேள்வி யுற்றதும், சந்திரவதி தன் குல ஒழுக்கினுக்கு இணங்க, உடன் கட்டை ஏறி உடன்மாள முயன்றனள்.

அருகிலிருந்த படைத்தலைவர் அது கண்டு, "அன்னாய்! நம் குலத்தை வேரறுக்க விரும்பி யுள்ளான் அம் மொகலாயப் படு பாவி. அவனைப் பழிக்குப் பழிவாங்க நாங் கள் கங்கணம் பூண்டுள்ளோம். யாருடைய தலைமையில் நின்று நாங்கள் சமர் புரிவது? தாங்களோ இச்சமயம் நிறை கர்ப்பம்; சில தினங்களில் ஓர் ஆண் மகவு உதிக்கும்

என்றே சோதிடம் வல்லார் கூறியுளார். ஆதலின், மைந்தனை ஈன்றெடுத்து, நம் பகையை முடிக்கும் வரையில், தாங்கள் உயிர் தாங்கி எங்களை வாழ்வித்தல் வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டனர். சந்திரவதி அதற்கு இணங்கி, காந்தார நாட்டை விட்டு ஜோதிபுரிக்குப் புறப்பட்டாள்.

தான் நினைத்த வண்ணம் காரியம் நடவாததுகண்ட அவுரங்கசீப் ஒருபடையை அனுப்பி, அச்சந்திரவதியை வழிமறித்துச் சிறை செய்ய ஆணை போக்கினன். இராஜ புத்திரர் அது கண்டு வீராவேசங் கொண்டு சந்திரவதியின் தலைமையில் அம்மொகலாயச் சேனையை முறியடித்து டில்லி சேர்ந்தனர். டில்லி நகரைக் கடந்து தான் ஜோதிபுரிக்குச் செல்லல் வேண்டும்.

இதற்கு இடையில் சந்திரவதிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அவுரங்கசீப் அஃதறிந்து அன்பு கொண்டவன் போல் நடித்து, இராஜபுத்திரரைச் சின்னாள் விருந்தினராக டில்லியில் இருக்கச் செய்தான். வஞ்சனை விளையும் என்பதை இராஜபுத்திரர் உணர்ந்தும், வஞ்சனையை வஞ்சனையால் மாய்க்கக் கருதி அந் நகரில் ஒரு வாரம் வரையில் தாமதித்து வருவாராயினர்.

மான் கன்றை வளர்த்துவர வேங்கைப் புலி விரும்புவது போல், பசுங் குழவியாம் அஜீத் சிம்மனை வளர்த்துவர அவுரங்கசீப் ஆசை கொண்டான். சந்திரவதி அதற்குச் சம்மதி தருவளோ? உடனே அம் மாய மொகலாயன் சாம தான பேதம் என்னும் மூவகை உபாயத்தையுங் கையாண்டு, இராஜ புத்திரரை வசஞ்செய்யப் பார்த்தனன். அம் முயற்சி அங்கு பலிக்க வில்லை.

முடிவில் தண்டோபாயமே சிறந்ததெனக்கொண்டு, சந்திரவதியையும் அவளுக்குத் துணையான முந்நூறு இராஜபுத்திர வீரரையும் அவ்விறைவன் சிறை செய்து விட்டனன். வீரர் அனைவரும் அந்நிகழ்வு கண்டு, அறிவிழந்து அலக்கண் உற்றனர்.

சந்திரவதியோ சிறிதும் தளராமல் துணைவரை உற்சாகப்படுத்தி, நம்பிக்கைக்குப் பாத்திரமான ஓர் இஸ்லாமியன் வசம் குழந்தையைக் கூடையில் மூடிக் கொடுத்து அப்புறப் படுத்தினள். மறு தினம் அதி காலையில் முந்நூறு துணைவருடன் அச் சிறையை மீறி மாதரசி ஜோதிபுரி நோக்கிப் புறப்படலானாள். அவ்வளவுதான் தாமதம்.

பத்தாயிரம்மொகலாய வீரர் பெருமிதத்துடன் கிளம்பி வந்து வழி மறிக்கவே, டில்லிமா நகரின் தெருவில் கடும் போர் நிகழலாயிற்று. சந்திரவதியே முன்னின்று மூந்நூறு வீரரையும் தூண்டி வந்தாள். கருவுயிர்த்த களைப்பினால் வாடியிருக்கும் காரிகை உடைவாளுருவி உறுத்தெழுவதைக்கண்டதும், இராஜபுத்திரர் உயிரைத் துரும்பென மதித்துச் சிங்க நாதஞ்செய்து சென்றேறிச் சமர் புரிந்தனர்.

அவ்வளவில், மொகலாய வீரரின் தலைகள் நிலத்தில் உருண்டன. கை வேறு கால் வேறாகக் குலைந் தோடிய முகம்மதியருக்கோ கணக்கில்லை. எனினும் எஞ்சிய மொகலாய வீரரோ மூர்க்கமுடன்மொய்யமர் முறுக்கினர்; இராஜபுத்திரரோ கோளரி போல் வெகுண்டெழுந்து, வீச்சுக்குப் பத்து இருபதாகப் பகைவரைப் பூமியில் வீழ்த்திக் கொண்டே யிருந்தனர்.

சந்திரவதியின் வாள் வீச்சினால், மொகலாயப் படைத் தலைவன் சிர மிழக்க, அக் கவந்தம் எழுந்து கூத்தாடத் தலைப்பட்டது. அரசியைக் காக்க வேண்டும் என்பது ஒரு புறமும், பழிவாங்க வேண்டும் என்பது மற்றொரு புறமு மாகத் தூண்டி நிற்கையில்,

மாருவார வீரர்மகிமை காட்டாதிருப்பரோ? முந்நூறு இராஜபுத்திரரில் இரு நூற்றுவர் வீர சுவர்க்கம் புகுந்து விட, ஒரு நூறு பேருடன் சந்திரவதி தந்திரமாகத் தன் பாலனிருக்கும் இடம் சேர்ந்தனள்.

உடனே அனைவரும் களிப்பு மிகக் கொண்டு, அரசக் கொழுந்துடன் ஜோதி புரிக்கு ஓட்டமும் நடையுமாகச் செல்லலாயி னர். இராஜபுத்திரரின் இணையிலா வீரங் கண்டு வேசாறிப்போன மொகலாயப் படை அவ் வீரமாதைத் தொடர்ந்துவரத் துணிவு கொள்ள வில்லை. ஜோதிபுரி சேர்ந்ததும், சந்திரவதி தன் குழந்தையைச் சீராட்டிப் பழிக்குப் பழி வாங்க வேண்டு மென்று பாலூட்டி வளர்த்து வந்தாள்.

அவுரங்கசீப்பின் வஞ்சனையைக் கேட் டுணர்ந்த இராஜபுதனம் முழுதும் திரண் டெழவே, மொகலாயவரசு ஆட்டமெடுக்கத் தொடங்கிற்று. ஒரு முப்பது ஆண்டு வரையில் அவுரங்கசீப் தனது படையனைத் தையும் கொண்டு மாருவாரத்தை மண்ணாக்கி விட அரும்பாடு பட்டான். ஆயினும் அம் மன்னவனது முயற்சிகளெல்லாம் அம் மாதரசி முன் மண்ணைக் கவ்வின.

அஜீத் சிம்மன் அரியணை ஏறியதும், மொகலாய வரசு சின்னபின்னமாகத் தொடங்கி விட்டது. அக்காட்சியைக் கண்டபின்னரே சந்திரவதி இம்மண் ணுலக வாழ்வை நீத்து, பகை முடித்தசெய்தியைப் பதிக்கு உரைப்பாள் போல் விண் ணுலக மென் னும் மேல் உலகம் போயினள்.

---

10. அரசி அகல்யா பாய்

நம்மவரிலே போர்க்குணமும் பேராண்மையும் படைத்த ஜாதியினரில் மூவரை முதன்மையாகச்சொல்லவேண்டும். அன்னார் இராஜபுத்திரர், மகாராஷ்டிரர், சீக்கியர் ஆவர். அம் மூவரில் மகாராஷ்டிரர் ஒரு காலம் இத்தேசத்திலே பேரரசும் பெருவாழ்வும் படைத்திருந்தனர்.

பின்னர் அவர்களுக்குள் சுய நலம் ஓங்கவே, ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டது. அதன் விளைவாக அன்னவரின் வல்லரசு சிதறலாயிற்று. எனினும் ஆங்கிலக் குடை நிழலின்கீழ் குறு நில மன்னராக வாழ்ந்து வருகின்றனர். அச் சிற்றரசுகளில் ஒன்று இந்தூர் எனப்படும். அது மத்திய இந்தியாவில் இருக்கின்றது.

பதினெட்டாம் நூற்றுண்டின் நடுவே மாலி ராவ் என்பான் இந்தூரின் வேந்தனாக அரியணை ஏறினன். அவனது அன்னை அகல்யா பாய் என்பாள் நாயகனை யிழந்த

துயரங் காரணமாக ஈசனை வழுத்துவதில் காலங் கழித்து வந்தனள்.

மாலிராவோ நெடுங் காலம் இராஜரீகம் பண்ணும் பாக்கியம் படைக்கவில்லை. சந்ததியின்றிச் சின்னாளில் அவ்வரசன் பரம பதம் போயினன். அரசுக்குரிய ஆண்மகன் இல்லாது போகவே, அகல்யா பாய் துறவறத்தில் சிந்தை செலுத்துவது எங்ஙனம்? உடனே அத் தேவி இராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொண்டாள்.

தமயந்தி, சீதைமுதலியோர் கற்பரசிகள் என்றால், அகல்யா பாயோ, கைகேயி, சத்தியபாமை முதலியவர்களைப் போல் அஞ்சா நெஞ்சும் அழியா அறிவும் இணையிலாது படைத்த வீரப் பெண்ணரசி யாவாள். க்ஷத்திரியமரபில்உதித்ததற்குஏற்பஅரசாளுவதற்குரிய அருங்குணங்கள் அவளிடம் ஒருங்கே குடிகொண்டிருந்தன.

அன்றும் சரி, இன்றும் சரி ஆண்மக்களிலே சிலர், பெண்ணென்றால் இலேசாக மதிப்பது வழக்கம். பணம் மிகப் படைத்த பெண் பாலரிடம் ஆடவர் பலர் மொய்த்திருந்து சமயம் பார்த்துப் பணத்தைப் பறிக்கச் சூழ்ச்சி புரிதலும் பிரசித்தம்.

அதிலும் ஒரு பெண்பால் அரசில் அமர்ந்திருக்கின்றனள் என்ருல், அதனை வவ்வி வாழப் பலரும் சதி செய்தல் உலக இயற்கை அல்லவா? அங்ஙனமே இந்தூர் ராஜ்யத்தில் பலர் பேராசை மேலிட்டு, அகல்யா பாய்க்கு அலக்கண் இழைக்கக் கருதி நின்றனர்.

அறிவு மிகப் படைத்த அகல்யை அச் சூழ்ச்சியை உணர்ந்து, அரசின் அங்கங் களில் தக்காரையே தேர்ந்து அமர்த்தினள்; அரசின் உறுப்பு ஒவ்வொன்றையும் ஊடுருவி நோக்கி, ஒழுங்கு படுத்த முயன்றனள்; புல்லுருவி போல் இருக்கக் கூடிய புருஷ ரைக் கண்டு அரசியல் பதவிகளை விட்டு அவர்களை விலக்கி ஒட்டினள்.

பணியாள் முதல் பிரதானி வரையில் அனைவரும் தத்தம் கடமையை நன்கு நிறைவேற்றி வரவேண்டுமெனக் கண்டிப் பான ஆணையிட்டாள் அவ்வரசி; அந்தரங்க மான ஒற்றரையும் தூதரையும் அமர்த்தி, அரசில் உள்ள ஊழல்களை உணர்ந்து, அரசியலை அன்பின் இருப்பிடமாக்கினள்.

அது கண்டு பேராசைக்காரரும், சதி காரரும் தயங்கித் திகைக்க நேரிட்டது.

அன்னரின் அக்கிரஸ்தானம் வகித்தோன் கங்காதரன் என்பவன். அவன் அரண்மனைப் புரோகிதர்களின் தலைவன்.

பல இடங்களில் அரண்மனைப் புரோகிதனுக்கு வரம்பு மீறிய செல்வாக்கு இருத்தல் உண்டு. அகல்யா பாய் அதற்குச் சிறிதும் இடந் தரவில்லை.

ஒரு தினம் அப் புரோகிதரை வரவழைத்து, "அன்பு மிக்க ஐய! சமய விஷயங்களில் நீரே அடியாளின் ஆசானும் தந்தையும் ஆவீர். எனினும், அரசியலில் நீர் சிறிதும் தலையிடக் கூடாது என்பதை வணக்கமுடன் விண்ணப்பித்துக் கொள்கின்றேன்," என்றனள் அவ்வரசி.

கங்காதரன் அது கேட்டு முதலில் திக்பிரமை கொண்டான். பின்னரோ, "இப் பெண்பால் எம் மாத்திரம்?" என்று கருதி வஞ்சனை வழியில் இறங்கலாயினன்.

இந்தூரின் இராஜ பரம்பரையில் அச் சமயம் சிறந்து விளங்கியவன் மாதவராவ் என்னும் மகா வீரன். அம் மாதவராவுக்கு அறிவும் ஆண்மையும் மிக அதிகம்; அதிக செல்வாக்கும் ஆற்றலும் அவனுக்கு உண்டு; தனக்கு அரசுரிமை கிடைக்க வில்லையே

7

எனும் ஏக்கம் மாத்திரம் அவனிடம் மிகுதியும் குடிகொண்டிருந்து வந்தது.

இதனை உணர்ந்த கங்காதரன் அம்மாதவராவிடம் சென்று நடந்ததை நவின்று சூழ்ச்சி வலை வீசலானான். அரசிலிருந்து அகற்றப்பட்ட அதிகாரிகளும் பிறரும் கங்காதரனுக்குப் பக்க பலமாயினர்.

ஒரு தினம் அத்தாணி மண்டபத்திலிருந்து அகல்யை அரசியலைக் கவனித்துக் கொண்டிருக்கையில், தூதனொருவன் ஆங்கு விரைந்து வந்து நிருப மொன்றை நீட்டினன். அதில், "பெண்ணே, உனக்கு அந்தப்புரமே ஏற்ற இடமாகும்; அத்தாணி மண்டபம் அன்று. இந்தூர் அரசு ஏற்றமுடன் இருக்க வேண்டின், இக்கணமே நீ ஓர் ஆண் மகவை மைந்தனாகக் கொண்டு, அரசியலை ஒரு பஞ்சாயத்திடம் ஒப்படைக்கத் தாமதிக்க வேண்டாம்; இதை அலட்சியமாக எண்ணாதே" என்று கண்டிருந்தது.

அக்கடிதங் கண்டு அரசி சிறிதும் சிந்தை கலங்கவில்லை. அத்தகைய சூழ்ச்சி தோன்று மென அவள் முன்னதாகவே யூகித்து, அதனை நசுக்குவதற் குரிய ஏற்பாடனைத்தும் செய்திருந்தனள். ஆபத்தில்

ஆருயிரையும் வழங்கக் கூடிய படைத் தலை வரும் பெருவீரரும் கொண்ட படை வகுப்புக்கள் திட்டமாயிருந்தன. வேவுகாரரோ நாடோறும் உளவனைத்தும் உய்த்துணர்ந்து வந்து அரசிக்கு உரையா நின்றனர்.

கணப் பொழுதில் அணி வகுத்து அமரில் குதிக்கவும் காத்து நின்ற அகல்யை அச்சம் என்பதின்றி, "மகாராஷ்டிரப்பெரு மக்களே, நாட்டின் நலத்தில் நாட்டங் கொள்ளுதலே நம் மரபின் இயற்கை; சுய நலத்தில் சிந்தை செலுத்தல் நம் குலத்துக்கு ஈனம். இதைத் திண்ணமா யெண்ணுங்கள்.

"எனினும் நெல்லில் பதர் உளது; நீரில் நுரை உளது. பதரும் நுரையும் போல் நீவிர் இருத்தல் ஆகாது என்பது எனது கோரிக்கை. ஆயினும் அபலையை அச்சுறுத்தி, அரசைக் கவர ஆசை கொள்ளின், ஆது ஆகாத காரியம் என்பதை நீவிர் நன்குணர்தல் நலமாகும். அரசி என்ற முறையில் அடியாள் அறிவிப்பது ஈதே.

"அரசியலில் குற்றம் குறை இருப்பின், சமுகத்தில் வந்து முறையிட்டுக் கொள்ளலாம். இந் நேர்வழியை விடுத்துச் சதியில் புகுந்து கலகம் செய்வதாயின், யானும்

மகாராஷ்டிர மரபில் வந்த வனிதை என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கட்டும்,'' என்று அச் சதிகாரருக்குப் பதில் விடுத்தனள்.

சதிகாரருக்கோ அம் மாற்றம் கூரம்பு போல் மனத்தில் பாயலாயிற்று. பெண்ணின் பதட்டத்தைப் போக்க வேண்டுமென அச் சதிகாரர் ஒரு படையைத் திரட்டி, மறு தினம் போர் முரசு கொட்டக் கருதி அதற்கேற்ற சூழ்ச்சியிலிருந்தனர்.

முந்திய இரவிலே அனைவரும் ஒருங்கே கூடி, போருக்குரிய உபாயங்களை ஆராய்ந்து கொண்டிருக்கையில், "மக்காள், புத்திரர் நெறிதவறின், அடித்துத் திருத்துதல் அன்னையர் கடன். நீவிர் அனைவரும் நெறியல்லா நெறியில் நினைவு கொண்டுள்ளீர்; ஆதலின் உங்களைச் சிறை செய்யும்வண்ணம் உத்தரவு செய்துள்ளேன். இங்ஙனம் இராணி அகல்யாபாய்,'' எனும் நிருபத்தை ஒரு தளகர்த்தன் அன்னவருக்குக் காட்டி, அத்தனை பெயரையும் காவலில் வைத்து விட்டனன் கணப் பொழுதில்.

கங்காதரன் கூண்டில் சிக்கிய சிங்கம் போல் தத்தளித்து, "நான் மதி மோசம் போனேன். மன்னித்தல் வேண்டும்''

என்று கெஞ்சலானுன். அங்ஙனமே அவ் வந்தணன் விடுதலை பெற்று நன்மதிகொண்டு தனது இல்லம் போயினுன்

இராகவ தாதா எனும் இளவலும் நல்லறிவு தலைப்பட்டு விடுதலைவேண்டி நிற்க, அவனுக்கும் விடுதலை கிடைத்தது. ஆயினும் இந்தூரில் வாழ்ந்திருக்க அவனுக்கு அனுமதி கிடைக்க வில்லை. ஏனைய சதிகாரரும் அறிவு கொளுத்தப் பெற்று, நாளடைவில் விடுபட்டனர்.

தாதா என்பானே தனக்கு நேர்ந்த கதியைக் குறித்துப் பெரிதும் வருந்தி, அரசியைப் பழி வாங்க வேண்டு மெனக் கருதி, அயலகத்தாரான இராஜபுத்திரரிடம் சரண் புகுந்தான். முன்னரே அதனை உணர்ந்த அகல்யை வாளா விருக்க வில்லை.

படைப் பலத்தை இன்னும் பெருக்கி, வேவுகாரரிலும் வல்லவரை அமர்த்தி, இராகவனது சூழ்ச்சியின் ஆழத்தை உணரத் தலைப்பட்டனள். சிறிது காலஞ் சென்றதும், இராஜபுத்திர வீரர் திடீரெனக் கிளம்பி, இந்தூரில் எல்லைப்புற நகரங்களை வசஞ் செய்து நாட்டினுள்ளே புகுந்தனர்.

அது கேட்ட அகல்யா பாய் ஓர் ஐயா யிரம் வீரரை முன்னதாக அனுப்பித் தானும் ஒரு பெரும் படையுடன் புறப்பட்டாள். முன் சென்ற படையோ பகைவரிடம் சிக்கிய நகரங்களை மீட்டு, அன்னாருடன் போர் தொடுக்கத்தொடங்கிற்று. இராகவன் துணை புரிவானென இராஜபுத்திரர் எதிர்பார்த்தும், அவனோ கிலி பிடித்து வெளிக் கிளம்பாது ஒளிவிடத்திலேயே மறைந்து கிடந்தனன்.

அகல்யையும் பெரும் படை கொண்டு வருவதைக் கேள்வியுற்றவுடன், இராஜ புத்திரர் புத்திசாலித்தனமாகப் பின் வாங்கிச் சென்று விட்டனர். பின்னர் அகல்யை அரி யணையில் அமர்ந்திருக்கும் வரையில் இராஜ புத்திரர் இந்தூரை என்னென்று கேட்டு எட்டிப் பார்க்கத் துணிவு கொண்டாரில்லை.

இராஜபுத்திரரிடம் வெற்றி கொள்ளு தல் இலகுவான காரியம் அன்று. ஆதலின் அகல்யா பாயின் புகழ் எங்கும் பரவலாயிற்று. சதிகாரரும் அரசியின் பேராண்மை கண்டு பெட்டிப் பாம்பு போல் ஒடுங்கிவிட்டனர்.

போர்முனையில் படையை நடத்துவதில் ஆற்றல் காட்டியது போலவே, நாட்டை நன்குவளம் படுத்துவதிலும், அகல்யா பாய்

நிகரற்றவளாகத் துலங்கினள். அவ்வரசி அரியணையில் அமர்ந்த காலத்திலே, நாட்டில் திருடர் பயம் மாத்திரம் எங்கும் சிறிது நிரம்பியிருந்தது.

மாநிலங் காப்பவன் அதற்குத் தன்ஞல், தன் பரிசனத்தால், கள்வரால், பகைவரால், கொடிய விலங்குகளால் ஆபத்து நேரா வண்ணம் காத்தல் கடமை அல்லவா? நாட்டின் நலங் கெடுத்து வரும் கள்வரை வேரறுக்கும் வீரனுக்குத் தன் மகளை மணம் புரிவிப்பதாக அவ்வரசி ஒரு நாள் அவைக் களத்தே அறிவித்தனள். பலரும் அது கேட்டு மௌனம் சாதிக்க, வாலிபப் பருவம் வாய்ந்த யசோவந்தன் என்பவன் நான் என்று மார்தட்டிப் புறப்பட்டான்.

மூன்று மாத காலத்தில் அந் நாட்டிலே கள்வர் பயம் மருந்தினுக்கும் இல்லாது போயிற்று. அகல்யை உயிருடன் இருக்கும் வரை கள்வர் பயத்தால் அந்நாட்டினர் கண்ணீர் வடிக்க நேரவில்லை. வாலிபனது வீரச்செயல்கண்டு களித்த அரசி தான் வாக் களித்த வண்ணம் அவனை மருமகனாகக் கொண்டு மகிமை பலவும் புரிந்தாள்.

நீதி வழங்குவதில் துலைக்கோலை ஒப்பாள் அப் பெண்ணரசி. அறிவும், அனுபவமும், அன்பும் அடக்கமும் நிரம்பிய பெருமக்களை நீதிபதிகளாக அமர்த்தி அவள் அறக்கொடி தூக்கினாள்.

நீதிபதிகளின் தீர்ப்பில் நிம்மதி கொள்ளாதாரை நேரில் வருவித்து, இருவர் தம் சொல்லையும் நன்கு கேட்டு, இருவரும் பொருந்தத் தீர்ப்புக் கூறி அன்பு காட்டினள். அதிகாரிகளில் யாரேனும் குடிமக்களை வருத்தின், அரசி சும்மா விடாள். அத்தகைய புகாருக்கு இடமின்றிப் பார்க்க அவள்கொண்டகவலை கூறுந் தரம் அன்று.

ஒரு கிராமத்திலே தனிக னொருவன் சந்ததியின்றிப் பரகதி போயினன். அவன் மனைவி ஒரு பையனைப் பிள்ளையாகக்கொள்ள முயன்றாள். அக் கிராமாதிகாரியோ குறுக்கிட்டு, அவளது உடைமையை அரசுக்குச் சேர்க்க எண்ணினான். அகல்யைக்கு அது தெரிய வந்தது. உடனே அகல்யாபாய் அந்த அதிகாரியைத் தருவித்து நீதி புகட்டி, கைம்பெண்ணின் கருத்துக் கிணங்க, சுவீகாரஞ் செய்துகொள்ள உத்திர விட்டு, வேண்டிய உதவியும் புரிந்தனள்.

அந் நாட்டிலே பெரு நிதி படைத்த இரு வணிகர் இருந்தனர். இருவரும் உயிர் நீத்தவுடனே, அன்னாரின் மனைவியர் அரசியை அடைந்து, "அன்னாய்! விதி வசத்தால் பதியை இழந்தோம். புத்திர பாக்கியம் எங்களுக்கு இல்லை. பெருஞ் சொத்தோ இருக்கின்றது. அதனை எடுத்துக்கொள்ளுங்கள். நாங்கள் தலயாத்திரை செய்து ஈசனைத் தரிசித்துக் காலங் கழிக்கக் கருதியுள்ளோம். இனி எங்களுக்கு அதுதான் கதி" என்றனர்.

அகல்யை அது கேட்டு, "சோதரிகாள்! ஆண்டவன் அருளால் நிரம்பிய செல்வம் உளது எனது தன சாலையில். நீங்கள் இருவரும் தீர்த்த யாத்திரை செல்லுதல் எதன் பொருட்டு? தல யாத்திரை, ஆண்டவனைத் தரிசிக்கத் தானே? ஈசனைத் தரிசிக்க வேறிடமும் போக வேண்டுமோ? ஈசன் ஆலயத்திலே செம்பிலும் சிலையிலுமே இருக்கின்றான் என்பதில்லை. இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில் அன்றோ?

"எளியோரிடமும், நோய் நொடி கொண்டோரிடமும் ஈசன் வசிப்பதை அறியீரோ? அன்னாருக்கு ஊணும் உடையும் அளித்து ஆதரிப்பின், அதுவே ஈசனைத்

துதித்துத் தொண்டு புரிவதாகும். இந்த உண்மையினை உணராது போனது எங்ஙனம்? ஆதலின் உங்கள் ஊர் சென்று அனைத்து ஆலயம் நிருமியுங்கள், அறச்சாலை நிறுவுங்கள்; நீர் நிலையில்லா இடங்களிலே தடாகமும், குளமும் தோண்டுங்கள்; அன்ன சாலை அமைத்து, ஏழைகளின் பசிப் பிணியைப் போக்குங்கள்'' என்று போதம் புகட்டினள். உடனே இருவரும் அகம் குழைந்து, ஆனந்தங்கொண்டு அங்ஙனமே செய்யத் தலைப்பட்டனர்.

இணையிலா அரசசெல்வம் எய்தியிருந்தும் அகல்யாபாய் ஆடம்பர வாழ்வு கொண்டது கிடையாது. உடலினைக் காப்பதற்குரிய எளிய உணவும் உடையுமே அவள் ஆயுளளவும் கொண்டிருந்தாள். பவனி வருங் காலங்களிலும், வேற்றரசின் தூதரை வரவேற்கும் நேரங்களிலும், எளிய உடையில் இருப்பதே பவானியின் கோட்பாடு. தன் ஆடம்பரச் செலவுக்குரிய பணத்தை யெல்லாம் அவள் பொது ஜன நன்மைக்கு ஏற்ற துறைகளிலேயே செலவிட்டு வந்தாள்.

இந்தூரிலே கிராமந்தோறும் குளமும், கிணறும், சத்திரமும், சாவடிகளும் அவளால்

சமைக்கப் பட்டன. ஆண்டவனுக்குரிய ஆலயங்கள் பல அவள் காலத்தில் நாடெங்கும் எழும்பின. கயா நகரிலே விஷ்ணுபாதம் என அவள் ஆக்கிய கோயில் கண்ணையும் கருத்தையும் கவரும். அக் கோயிலுக்கு அகல்யா பாய் விட்டுப் போன மானியங்கள் பலவாம். அந்த ஆலயத்தைத் தரிசிப்பவர் அகல்யா பாயின் அருமை பெருமைகளை அறிந்து அரும் பெருங் குணத்தை வியந்து ஆனந்திப்பர்.

மானிடரிடம் மட்டும் மன்று, விலங்குகளிடமும், பறவைகளிடமும் அவள் அதிக அன்பு கொண்டவள். கிராமந் தோறும் ஆடுமாடுகளுக் குரிய மேய்ச்சல் நிலங்களை அவள் ஒதுக்கி வைத்தனள்; பறவைகள் இன்பமாய் வசிப்பதற்குரிய சோலைகளை வளர்த்து வந்தனள்; வயதாகி விட்ட ஆடு மாடுகளையும் மற்றைப் பிராணிகளையும் இரட்சிக்க விலங்காச்சிரமங்கள் ஏற்படுத்தினள்.

தனது முப்பது வருஷத்தின் ஆட்சிக் காலத்திலே அவ்வரசி செய்த தர்மங்கள் எண்ணிறந்தன. 1795 ஆம் ஆண்டு அவள் ஆண்டவன் பாதம் சேர்ந்தாள். அவளது பெயரைக் கேட்டவளவில் மகா

ராஷ்டிரத்திலே அனைவரும் அன்புடனும் பக்தியுடனும் இன்றும் பேசுவர்.

அத்தகைய பெண்ணரசியை மீண்டும் அடைய இப்பூமி என்று பாக்கியம் பெறும்! இன்றும் நாளையும் மகாராஷ்டிரத்திலே ஆண்டுதோறும் அவளது ஜன்மதின விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது.

முதற்பாகம்

முற்றிற்று.

Printed at the Easen Printing Works, Madura:—40.

Cindy

1-11-90

நன்னெறி புகட்டும் புத்தகங்கள்.

பாண்டவ வீரர்கள்		...	0—8—0
அறிவு விளக்கக் கதைகள் முதல் பாகம்...			0—8—0
௸ இரண்டாம் பாகம்		....	0—6—0
சாவித்திரீ தேவி	....	...	0—5—0
பத்மினி	...	...	0—3—0
மனோரமை	...	...	0—5—0
சிறுவர் பொக்கிஷம் I	...	...	0—3—0
௸ II	...	....	0—4—0
௸ III	...	...	0—5—0
௸ IV	...	...	0—5—0
உலகநீதி	நீதிவாக்கியக்கதைகள்		0—2—0
ஆத்திசூடி	௸		0—2—0
கொன்றைவேந்தன்	௸		0—2—0
வெற்றிவேற்கை	௸		0—3—0
மூதுரை	௸		0—5—0
நல்வழி	௸		0—10—0
மாதர்நீதி	...	...	0—5—0
நவீன இந்திய மணிகள்	...	...	0—6—0
பலநாட்டுச் சிறுவர்கள்	...	...	0—3—0
பலநாட்டுச் சிறுமிகள்	...	...	0—4—0
சிறுவர் கதைகள்	...	...	0—4—0
மௌரிய சக்கரவர்த்தி	...	...	0—6—0
நமது நாட்டுக் கதைகள்	...	...	0—5—0

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

புத்தக வியாபாரம்,

ஸ்ரீ கோபால் மஹால், வடக்குச் சித்திரை வீதி, மதுரை.